# ஐக்கிய இராச்சியம்

க. குணராசா B.A. Hons (Cey) M.A.S.L.A.S



கமலம் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் புவியியல்

## ஐக்கிய இராச்சியம்

க. குணராசா. B. A. Hons. (Cey.) M. A, S.L. A. S.

(முன்னாள் புவியியல் உதவி விரிவுரையாளர் இலங்கைப் பல்கலைக்கழகம்,
பேராதனை கொழும்பு.

புவியியல் ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி,
பகுதி நேர விரிவுரையாளர், தொழில் நுட்பக் கல்லூரி. யாழ்ப்பாணம்,
அதிதிப் போதனாசிரியர், ஆசிரிய கலாசாலை, கொழும்புத்துறை,
ஆலோசக ஆசிரியர் ( புவியியல் ),
காரியாதிகாரி, கின்னியா; உதவி அரசாங்க அதிபர், ( அபிவிருத்தி )
கிளிநொச்சி,
மேலதிக உதவி அரசாங்க அதிபர் ( காணி ) கிளிநொச்சி.

விற்பனையாளர்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ திருத்திய ஐந்தாம் பதிப்பு
ஏப்பிரல் 1989

★ அச்சுப் பதிவு:

சுவர்ணா பிரிண்டிங் வேக்ஸ்.
295/7, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விலை - 15-00

விற்பனையாளர்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கோள் நூல்கள்


1. *A Geography of Europe — Jean Cottmann, Henry Holt and Company, Newyork* — 1954.

2. *A Regional Geography, Europe and the Mediterranean L. Dudley Stamp, Longmans, London* — 1953.

3. *The British Isles. L. Dudley Stamp and S. H. Beaver London* — 1937.

4. *Britain in brief. prepared by Reference Division, Central Office of information London* — 1976.

5. *Statistical Abstract of the United Kingdom (Annual).*

6. *Encyclopaedia Brittanica.*

7. பிரித்தானிய தீவுகள்,
க. குணராசா, ஸ்ரீலங்கா வெளியீடு, 1977.

8. பொருளாதாரப் புவியியல், C. F. யோன்சும் G. G. டாக்கண் வாழ்டும் அரச கருமமொழித் திணைக்கள வெளியீடு, 1977.

9. ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல், A. S. நாராயணன் தமிழ் வெளியீட்டுக் கழகவெளியீடு சென்னை — 1964.

10. அபிவிருத்திப் புவியியல் — க. குணராசா, ஸ்ரீலங்கா வெளியீடு யாழ்ப்பாணம் — 1982.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களின் அபிவிருத்திப் புவியியலின் ஒரு பகுதி தனி ஆய்வாகும். அதில் ஆராயப்பட வேண்டிய நாடுகளில் ஒன்று ஐக்கிய ராச்சியம். ஐக்கியராச்சியத்தின் அபிவிருத்திப் புவியியலை இந்நூல் விளக்குகிறது. பாடநூல் தேவையை மனதில் கொண்டு இந்நூல் ஏராளமான விளக்கப்படங்களுடன் ஆக்கப்பட்டிருக்கின்றது. புதிய புள்ளிவிபரங்கள் கைக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நூலைக் கல்வியுலகு உவந்தேற்கும் என நம்புகிறேன். ஆசிரியப் பெருமக்கள் இந்நூலிலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டினால் நன்றியுடன் ஏற்று அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்வோம்.

வணக்கம்

க. குணராசா.

62, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
10-02-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைப்பும் தரைத்தோற்றமும் 1

இன்றைய உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளுள் ஐக்கிய இராச்சியம் ஒன்றாகும். ஐரோப்பாக் கண்டத்தின் வடமேற்கு ஓரத்தில் அத்திலாந்திக் சமுத்திரத்தில் பிரித்தானிய தீவுகள் அமைந்துள்ளன. இத்தீவுகள் இலங்கையைப் போல் ஐந்து மடங்கு பெரியன. பிரித்தானிய தீவுகளில், பெரிய பிரித்தானியா, அயர்லாந்து எனும் இரு பெரிய தீவுகளுள்ளன, இவற்றைவிட சட்லண்ட் தீவுகள், ஓர்கனித் தீவுகள், கேப்றிடிஸ் தீவு வைற் தீவு, மான் தீவு முதலான அநேக சிறு தீவுகளு முள்ளன. பிரித்தானிய தீவுகளின் மொத்த நிலப்பரப்பு 3,12,491 சதுர கிலோ மீற்றர்களாகும். ஆங்கிலக் கால்வாய், டோவர் தொடுகடல், வடகடல் என்பவற்றினால், பிரித்தானிய தீவுகள் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரிக்கப் பட்டிருக்கின்றன.


## இடவமைப்பு

பிரித்தானிய தீவுகள் 50° வட அகலக் கோட்டிற்கும் 60° வட அகலக் கோட்டிற்கும் இடையில் அமைந்திருக்கின்றன. பிரித்தானிய தீவுகளின் மேற்கு நெடுங்கோடாக 12° மேற்கு நெடுங்கோடும் கிழக்கு நெடுங்கோடாக 2° கிழக்கு நெடுங்கோடும் உள்ளன. லண்டனின் கிறீன்விச் என்ற இடத்திற்கு ஊடாக 0° பிரதான நெடுங்கோடு செல்கின்றது: அதனாலிது கிறீன்விச் நெடுங்கோடு என்ற பெயரையும் பெற்றுள்ளது; பிரித்தானிய தீவுகளின் ஆகக் கூடிய நீளம் 966 கி. மீ ஆகும். இது பெரிய பிரித்தானிய தீவின் தென் கரையிலிருந்து வட அந்தம் வரையுள்ள நீளமாகும். இத்தீவின் ஆகக்கூடிய அகலம் 88 கி.மீ ஆகும். பிரித்தானிய தீவுகளின் எந்தவொரு பகுதியும் கடலிலிருந்து 121 கி. மீ - க்கு அப்பால் அமைந்திருக்கவில்லை.

ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து, ஐரிஸ் குடியரசு எனப் பிரித்தானிய தீவுகளின் நிர்வாகப் பிரிவுகளுள்ளன ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து என்ற நான்கு நிர்வாகப் பிரிவுகளும் ஒருங்கே ஒரே இராச்சியப் பிரிவாக இருக்கின்றன; இதனையே பிரித்தானியா அல்லது ஐக்கிய இராச்சியம் என்று வழங்குவர். அயர்லாந்துத் தீவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய இராச்சியம்




படம்; I பிரித்தானிய தீவுகளின் நிலையம்.

வடக்கே சிறு பகுதி ஐக்கிய இராச்சியத்தினுள் அடங்க, மிகுதி பெரும்பாகம் ஐரிஸ் குடியரசு என வழங்கப்படுகின்றது: இது சுதந்திரமான ஒரு தனி அரசாகும்.

பிரித்தானிய தீவுகளின் மொத்த நிலப்பரப்பு 312494 சதுர கிலோ மீற்றர்கள் எனக் கண்டோம். இதில் ஐக்கியஇராச்சியத்தின் மொத்தப் பரப்பு 2,44,100 சதுர கிலோ மீற்றர்களாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய இராச்சியம்

உலகின் நிலப்பரப்பில் 2சத வீதத்தைக் கொண்டுள்ள ஐக்கிய இராச்சியம் பருமனில் உலகில் 75வது நாடாகும்.


## நிலைய முக்கியத்துவம்

பிரித்தானிய தீவுகள் அமைந்திருக்கும் நிலைய முக்கியத்துவத்தினால், இத்தீவுகள் சமூக பொருளாதார, அரசியல் நலன்களைக் கொண்டிருக்கின்றன. கோள நிலப்பரப்பின் மத்திய பாகமாகப் பிரித்தானிய தீவுகள் அமைந்து விளங்குகின்றன. பழைய கண்டங்களுக்கும் அமெரிக்கப் புதிய கண்டங்களுக்கும் இடையில் ஒரு மத்திய நிலையத்தில் இத்தீவுகள் அமைந்துள்ளமை இதன் முக்கியத்துவத்தை அதிகரிக்க வைத்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் பிரதான நகர்களுக்கும் ஐரோப்பிய நகர்களுக்குமான போக்குவரத்துப் பாதைகள் பெரிதும் பிரித்தானிய தீவுகளினூடாகவே அமைந்துள்ளன. பிரித்தானிய தீவுகளின் வசதிகள் நிறைந்த நவீன துறைமுகங்கள், கடற்போக்குவரத்தைப் பொறுத்தளவில் அத்திலாந்திக்கில் முக்கியத்துவம் வகித்து வருகின்றன. வெப்ப நீரோட்டமான அத்திலாந்திக் நகர்வின் வடகீழ் எல்லையாகப் பிரித்தானியதீவுகள் அமைகின்றன. அதனால்தான் பிரித்தானிய தீவுகளின் காலநிலை மக்கள் வாழ உவப்பானதாக இருக்கின்றது. வட அத்திலாந்திக வெப்ப நீரோட்டம் இல்லாவிடில். சைபீரியா போன்று, பிரித்தானிய தீவுகளும் பனி படர்ந்து விருத்தியற்ற நாடாகக் காணப்பட்டிருக்கும். பிரித்தானிய தீவுகள் அகன்ற கண்ட மேடையில் அமைந்துள்ளமை பிறிதொரு நிலைய வாய்ப்பாகும் அகன்ற கண்ட மேடையில் அமைந்திருப்பதனால், சிறந்த மீன்பிடித் தளங்கள் பிரித்தானிய தீவுகளைச் சூழ்ந்து உருவாகியுள்ளன. அத்துடன் பிரித்தானிய தீவுகள் மிக நீண்ட கடற்கரைகளைக் கொண்டனவாகவுள்ளன. கடற்கரையோரமும் பல்லுருவக் கரையோரமாக இருப்பதனால் சிறந்த துறைமுகங்களும் உருவாகியுள்ளன.

## அமைப்பும் தரைத்தோற்றமும்

பிரித்தானிய தீவுகளின் தரைத்தோற்றத்தில் இரண்டு பிரதான வேறுபாடுகளை முக்கியமாக அவதானிக்க முடியும். அவை (அ) உயர் நிலப் பிரதேசம்: (ஆ) தாழ் நிலப் பிரதேசம் என்பனவாம். பொதுவாக இத்தீவுகள் 1250 மீற்றர் வரை உயரமான மலைப்பகுதிகளையும், கடல் மட்டச் சமவெளிகளையும் கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: 2 பிரித்தானிய தீவுகளின் தரை தோற்றம் – உயர்நிலங்கள் புள்ளிகளால் காட்டப்பட்டுள்ளன. பிரித்தானிய தீவுகளின் இரு பெரும் தரையுயர்ச்சி வேற்றுமைகளைக் காணலாம்.

பெரிய பிரித்தானியாவின் தென்கிழக்குப் பாகம் தாழ்நிலமாகும். இப்பாகத்தை இங்கிலாந்தின் பெரும் சமவெளி என்பர். இங்கிலாந்தின் மத்திய பாகம், தென் பாகம், கிழக்குப்பாகம் என்பன தாழ்நிலங்களாகக் காணப்படுகின்றன. அயர்லாந்தின் மத்திய பாகமும் தாழ் நிலமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்த, வேல்ஸ் ஏரிமாவட்டம், இங்கிலாந்தின் வடமத்திய பாகம் என்பன உயர்நிலங்களாக உள்ளன; இவை மலைத் தொடர்களையும் மேட்டு நிலங்களையும் கொண்டிருக்கின்றன. இங்கிலாந்தின் முதுகெலும்பு எனப்படும் பெனைன் மலைத்தொடர், ஸ்கொட்லாந்திலுள்ள கிராம்பியன் மலைத் தொடர், வேல்சிலுள்ள கேம்பிரியன் மலைத்தொடர் என்பன குறிப்பிடத்தக்கன. அயர்லாந்தின் மத்திய பகுதி சமவெளியாகவும், கரையோரங்கள் உயர்நிலமாகவுள்ளன. அதனாலேயே அயர்லாந்து ஒரு கோப்பை வடிவிலுள்ளது என்பர்.

## தரைத்தோற்றப் பிரிவுகள்

பிரித்தானிய தீவுகளை (அ) உயர்நிலப் பிரதேசம், (ஆ) தாழ்நிலப் பிரதேசம் என இருபெரும் தரைத்தோற்றப் பிரிவுகளாக வகுத்து ஆராய்வது இலகுவானதாகும்: எனினும், உயர்நிலம்-தாழ்நிலம் எனப் பாகுபடுத்தல் புவியியல் மெய்மைக்கு இயைந்ததன்று. ஏனெனில், பிரித்தானிய் தீவுகளில் அமைந்திருக்கும் உயர் நிலங்கள், இமயமலைத் தொகுத போன்றோ அல்பஸ் மலைத்தொகுதி போன்றோ ஒரே தொடர்ச்சியான தன்மையைப் பிரதிபலிப்பனவாக வில்லை. அவை நதிகளினாலும் தாழ் நிலங்களினாலும் மேட்டு நிலங்களினாலும் குறுக்கிடப்பட்டு, தொடர்ச்சியான பண்பினைப் பிரதிபலிக்காமல், தனித்தனி உயர்நிலங்களாகக் காட்சி தருகின்றன. படம்: 3ஐ அவதானிக்கில், உயர் நிலங்கள் வடமேற்கு உயர்நிலம், கிராம்பியன் மலை, தென் உயர் நிலம், பெனைன்மலை, கேம்பிரியன் மலை, தென் மேல் உயர் நிலம் எனப் பிரிந்து பிரிந்து அமைந்துள்ளமையைக் காணலாம். அதனால், தாழ் நிலங்களும் மேட்டு நிலங்களும்கூட, வெவ்வேறு அமைப்புப் பண்பினைப் பிரதிபலிப்பனவாகக் காணப்படுகின்றன, அத்துடன் உயர்நிலங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு புவிச்சரித காலத்திற்குரிய பாறைகளையும் அமைப்பையும் கொண்டனவாயும், தாழ்நிலங்களும் வெவ்வேறு கால அடையற்படிவுகளைக் கொண்டனவாயும் அமைந்துள்ளன. இவற்றையெல்லாம் மனதிற் கொண்டு, பிரித்தானிய தீவுகளின் அமைப்பையும் தரைத் தோற்றத்தையும் பின்வரும் இயற்கைப் பிரிவுகளாக வகுத்து ஆராயலாம். அவையாவன:

### 1. ஸ்கொட்லாந்தின் உயர் நிலங்கள்

இது ஸ்கொட்லாந்தின் வட அரைப் பாகத்தைக் கொண்டுள்ளது; இப்பகுதி நன்கு வெட்டுண்ட மேட்டு நிலமாகக் காட்சி தருகின்றது. பனிக்கட்டியாற்றுக் காலத்தில் இம்மேட்டு நிலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: 3 தரைத்தோற்றப் பிரிவுகள்

பாகம் நன்கு அரிக்கப்பட்டது. கேம்பிரியனுக்கு முந்திய கால உருமாறிய பாறைகள் இவ்வுயர் நிலமாகக் காணப்படுகின்றன. இரு தெளிவான உயர் நிலப் பிரிவுகளை ஸ்கொட்லாந்தின் உயர்

நிலங்களில் காணலாம். வடக்கே அமைந்திருப்பது வடமேற்கு உயர் நிலமாகும்; தெற்கேயுள்ளது கிராம்பியன் மலைகளாகும். வடமேற்கு உயர் நிலத்தையும் கிராம்பியன் மலைகளையும், நீஸ் நதி பாயும் கிளீன் மோர் அகழி பிரிக்கின்றது. கிராம்பியன் மலைப்பகுதியில் சுருங்கல் போன்ற தலையிட்டுப் பாறைகள் காணப் படுகின்றன. ஸ்கொட்லாந்தின் உயர் நிலங்கள் பனிக்கட்டியாற் றின் தாக்கத்திற்குட்பட்டது என்பதனை, இப்பிரதேசத்தின் மேற் குக் கரையோரத்தின் வடிவிலிருந்து அறிந்து கொள்ளக்கூடிய தாகவுள்ளது. இம்மேற்குக் கரையோரம் நுழைகழிகளைக் கொண்ட பல்லுருவக் கடற்கரையாகக் காட்சி தருகின்றது மேலும் இக் கரைப் பகுதிகளில் எரிமலைக் குழம்புப் பாறைகள் காணப்படுகின் றன. பொதுவாக ஸ்கொட்லாந்தின் உயர் நிலங்கள் 600 மீற்றர் களுக்கும் 1000 மீற்றர்களுக்கும் உட்பட்டன. ஸ்கொட்லாந்தின் உயர் நிலங்களுக்குக் கிழக்கேயும் வடகிழக்கேயும் ஒடுங்கிய பள்ளத் தாக்குகளும் கரையோரத் தாழ்நிலமும் அமைந்துள்ளன. இவை வளமான மண்பிரதேசங்களாகும். இவை பலியோசோயிக் காலத் துக்குரிய செம்மணற் கற்படிவுகளைக் கொண்டுள்ளன. (Red Sand Stone) ஸ்கொட்லாந்தின் உயர் நிலத்தில் உற்பத்தியாகின்ற ஸ்பே நதி, டொன்நதி, டீ நதி, ரே நதி என்பன ஒடுங்கிய பள்ளத் தாக்கினூடாகக் கீழிறங்கி, வடகிழக்குக் கரையோரத் தாழ்நில மூடாக வடகடலை அடைகின்றன.

## 2. மிட்லாந்துப் பள்ளத்தாக்கு

ஸ்கொட்லாந்தின் மிகமுக்கிய பிரதேசமான மிட்லாந்துப் பள்ளத்தாக்கு, வடக்கேயுள்ள உயர் நிலங்களுக்குத் தெற்கே கிளைட் நதியினதும் போத் நதியினதும் வடிநிலமாக அமைந்துள் ளது. மிட்லாந்துப் பள்ளத்தாக்கு, வடக்கே வட உயர் நிலத்தி னாலும் தெற்கே தென் உயர் நிலத்தினாலும் நன்கு வரையறுக் கப்பட்டிருக்கின்றது. இப்பள்ளத்தாக்கு வட பாகத்தில் செம்மணற் படிவுகளையும் மத்தியில் சற்று வடபுறமாக எரிமலைக் குழம்புத் தலையீடுகளையும் மத்திய பாகத்தில் கார்போனிபரஸ் கால படிவு களையும் (Carboniferous) கொண்டு அமைந்திருக்கின்றது. கார் போனிபரஸ் காலப்படிவுகளில் நிலக்கரிப் படிவுகளும் சுண்ணாம்புக் கற்படிவுகளும் குறிப்பிடத்தக்க அடையல்களாகவுள்ளன. இவ்வடை யற் படிவுகள் மடிப்பாக்கத்திற்குட்பட்டுள்ளன. அயர்சயர் நிலக் கரி வயல், லாறூர்க்சயர் நிலக்கரி வயல், பிபிசயர் நிலக்கரி வயல் என்பன மிட்லாந்துப் பள்ளத்தாக்கிலேயே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: 4 பிரித்தானிய தீவுகளின் புவிச்சரிதவியல்

## 3. ஸ்கொட்லாந்தின் தென் உயர் நிலம்

மிட்லாந்துப் பள்ளத்தாக்கிற்குத் தெற்கே அமைந்திருப்பது தென் உயர் நிலமாகும். 860 மீற்றர்களுக்கு மேற்பட்ட உச்சிகளைக்கொண்ட வடகிழக்கு – தென்மேற்குப் போக்கில் ஸ்கொட்லாந்தின் தென் உயர் நிலம் அமைந்துள்ளது. இது வடகால்வாயிலிருந்து வடகடல் வரை அமைந்திருக்கின்றது. இத்தென் உயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப், ஓடோவிசியன் - சிலூரியன்-கேம்பிரியனுக்கு முந்திய காலத்திற்குரிய பழைய பாறைகளால் ஆக்கப்பட்டிருக்கின்றது. இதன் தென்கீழ்ப் பாகத்தில் செம்மணற் கற்படிவுகளும், சுண்ணும்பக் கற்படிவுளும் காணப்படுகின்றன.

## 4. பெனையின் மலைப் பிரதேசம்

இங்கிலாந்துப் பிரதேசத்தின் முதுகெலும்பாகப் பெனின் மலைப்பிரதேசம் அமைந்துள்ளது என்பர் வடக்கு - தெற்கு போக்கில் அமைந்திருக்கும் இம்மலைப் பிரதேசத்தின் அதி உயர்ந்த சிகரம் 95? மீற்றர் உயரமான குரெஸ் பெல் லாகும். பெனின் மலைப்பிரதேசத்தின் வடபகுதியில் வடகிழக்கு - தென் மேற்காக செவியட்ஸ் மலை அமைந்துள்ளது. பொதுவாகப் பெனின் மலைப் பிரதேசம் முழுவதும் கார்போனிபரஸ் (நிலக்கரிக் கால) அடையல்களால் ஆனது ஆகும். பெனின் மலைப்பிரதேசத்தின் வடகிழக்குப் பாகமான நொதர்ம்பர்லாண்ட், கிழக்கிலுள்ள யோக்சாயர், மேற்கிலுள் லங்காசயர் எனும் பகுதிகள் நிலக்கரிப் படிவுகளைக் கொண்டிருக்கின்றன. இவை தவிர்ந்த ஏனைய பெனின் மலைப்பிரதேசம் முழுவதும் சுண்ணும்புக்கல் படிவுகளைக் கொண்டுள்ளன. தென் பெனின் மலைப் பிரதேசம் வட பகுதியிலும் உயரத்தில் தாழ்ந்ததாகும், கிழக்குச் சாய்வில் ரீஸ், சுவல், வார்பே, அயர், டொான், டேவென்ற், றென்ற் முதலிய அருவிகள் ஊற்றெடுத்துக் கிழக்குக் கரைத் தாழ் நிலத்தில் பாய்கின்றன. எடன். மேர்சி முதலான நதிகள் மேற்குச் சாய்வில் உற்பத்தியாகின்றன.

## கம்பிரியா மலைப்பிரதேசம்

பெனின் மலைப் பிரதேசத்திற்கு மேற்கே தெளிவானதொரு இயற்கைப் பிரதேசமாக கம்பிரியா மலைப்பிராதேசம் அமைந்துள்ளது. அதனை ஏரி மாவட்டம் என்றும் வழங்குவர். கம்பிரிய மலை பிரதேசத்தின் அதி உயரம் 1070 மீற்றர் சிகரமாகும். கம்பிரியா மலை, இப்பிரதேசத்தின் மத்திய திணிவாக அமைந்திருக்க அதனைச் சூழ்ந்து தாழ்நிலமமைந்துள்ளது. இப்பிரதேசம் ஒடோவியன் காலப் பாறைகளையும், எரிமலைக் தலையீட்டுப் பாறைகளையும் கொண்டமைந்துள்ளது. வடபாகத்தில் கார்போனிபரஸ் படிவுகளும், மேற்குக் கரையில் செம்மணற் படிவுகளும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. வேல்ஸ் உயர் நிலம்

பிரித்தானிய தீவுகளின் தெளிவான ஓர் இயற்கைப் பிரதேசமாக வேல்ஸ் உயர் நிலம் அமைந்துள்ளது. பொதுவாக 200 மீற்றர்களுக்கு மேலுயர்ந்து, சினோடன் போன்ற 1112 மீற்றர் உயரமான சிகரங்களையும் கொண்டதாக, வடக்குத்- தெற்குப் போக்கில் அமைந்து கேம்பிரியன் மலைத் தொடர் காணப்படுகின்றது. ரய்வி நதி, வே நதி, செவன் நதி என்பன கேம்பிரியன் மலைத் தொடரில் உற்பத்தியாகின்றன. பொதுவாக வேல்ஸ் உயர்நிலம்,ஸ்கொட்லாந்தின் தென் உயர் நிலத்தினை ஒத்த பழைய பாறைகளைக் கொண்டிருக்கின்றது வட மேற்கிலும் தென்மேற்கிலும் எரிமலைப் பாறைத் தலையீடுகள் காணப்படுகின்றன. தென்கிழக்குப் பாகத்தில் செம்மணற் கல் படிகளும், கார்போனிபரஸ் நிலக்கரிப் படிவுகளும் அமைந்திருக்கின்றன.

## 7 தென் மேற்குப் பிரதேசம்

பெரிய பிரித்தானியாவின் தென் மேற்குப்பிரதேசமான டேவொனும் கோன்வோலும் ஒரு தெளிவான இயற்கைப் பிரதேசமாகும் இப்பிரதேசத்தின் உயர்மலைப் பிரதேசங்களென எக்ஸ்மூர் (535 மீற்றர்) போட்மின்மூர், டாட்மூர் (633 மீற்றர்) என்பவற்றைக் குறிப்பிடலாம், பொதுவாக இத் தென் மேற்குப் பிரதேசம் பழைய பாறைகளைக் கொண்டமைந்துள்ளது. இப்பிரதேசத்தின் தென்பாகத்திலும் வட பாகத்திலும் தலையீட்டுப் பாறைகளைக் கொண்ட, செம்மணற் கற் படிவுகளுள்ளன. மத்திய பாகத்தில் கார்போனிபரஸ் காலத்தைச் சேர்ந்த சுண்ணம்புக் கற் படிவுகள் காணப்படுகின்றன. டாட்மூர் ஒரு தலையீட்டுப் பாறைத் திணிவாகும்.

## 8 இங்கிலாந்தின் பெரும் சமவெளி

பிரித்தானிய தீவுகளின் மிகப் பரந்த சமவெளி இதுவாகும். இச்சமவெளியில் (அ) லங்காசயர்-செஷயர் சமவெளி கிழக்குப் பாகத்தில் பெனைன் மலைத்தொடருக்கும் ஐரிஸ் கடலுக்கும் இடையில் அமைந்துள்ளது; பெனைன் மலைத்தொடருக்குக் கிழக்கே வட கடல் வரை (ஆ) யோக்சயர் தாழ்நிலம் அமைந்துள்ளது. வேல்ஸ் பிரதேசத்திற்கும் தென் பெனைன் மலைத் தொடருக்கும் இடையில் (இ) மிட்லாந்துச் சமவெளி காணப்படுகின்றது. இங்கிலாந்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் சமவெளியின் மத்தியில் தென் மேற்கு வடகிழக்காக (ஈ) குத்துச்சரிவு நிலம் என்று அமைந்துள்ளது (Scarrland) இக்குத்துச் சரிவு நிலத்திற்கு தென் கிழக்கேயும் (உ) அங்கிலியாத் தாழ் நிலம். (ஊ) லண்டன் வடிநிலம் (எ உவீலட் தாழ்நிலம் என்பன அமைந்துள்ளன.

பொதுவாக இப் பெரும் சமவெளி மெசோசோயிக் காலத்திற்கும் உரிய அடையற் படிவுகளைத் திரளாகக் கொண்டமைந்துள்ளது லங்காசயர் - செஷயர் சமவெளி. றையாசிக்-பேமியன் காலத்துக்குரிய மணற் கற்படிவுகளையும் களியையும் கொண்டிருக்கின்றது: மேசி நதி இச் சமவெளியினூடே பாய்கின்றது. யோக்சயர் தாழ்நிலம் மெசோசோயிக் காலத்திற்குரிய பல் வகை அடையல்களையும் கொண்டிருக்கின்றது. மணற் கற்படிவுகள், களிமண், படிவுகள் - சுண்ணாம்புக்கல் அடையல்கள், சோர்க்குப் பாறைப் படிவுகள் என்பன யோக்சயர் தாழ் நிலத்தில் காணப்படுகின்றன; கம்பர் நதி தனது விரிந்து பரந்த கிளைகளுடன் இத்தாழ் நிலத்தினூடாகப் பாய்கின்றது மிட்லாந்துத் தாழ் நிலம் செம்மணற் படிவுகளையும். நிலக்கரிப் படிவுகளையும் கொண்டிருக்கிறது. மத்தியிலுள்ள குத்துச்சரிவுப் பிரதேசம் யுருசிக் காலச் சுண்ணாம்புக்கல் அடையலைக் கொண்டிக்கின்றது. இக்குத்துச் சரிவு நிலத்திற்குக் கிழக்கேயும் தென் கிழக்கேயும் காணப்படும். தாழ் நிலங்கள் சோக்குப் பாறைப் படிவுகளையும், மணற்களிப்படிவுகளையும், வண்டல் படிவுகளையும் கொண்டுள்ளன. தேமஸ் நதி பாயும் லண்டன் வடிநிலம் கயினோசோயிக் காலத்துக்குரிய மணற் படிவுகளையும் களிமண் படிவுகளையும் கொண்டிருக்கின்றது.

## 9. அயர்லாந்துப் பிரதேசம்

அயர்லாந்தின் மத்திய பகுதி தாழ்நிலமாகவும், கரையோரங்கள் உயர் நிலமாகவுமுள்ளன. அயர்லாந்தின் வடமேற்குக் கரையில் டெரிவெயாக் மலைகளும், வடக்கே அன்ரிம் மலைகளும், கிழக்கே மோர்ண் மலைகளும் விக்லோ மலைகளும், தெற்கே கல்ரி மலைகளும் சூழ்ந்து அமைந்திருக்க. மத்தியில் மத்திய சமவெளி அமைந்துள்ளது மத்திய சமவெளி முழுவதும் பொதுவாக கார்போனிபரஸ் காலச் சுண்ணாம்புக்கல் அடையற் படிவுகளைக் கொண்டு விளங்குகின்றது. வடபாகத்தில் உருமாறிய பழைய பாறைகளையும், எரிமலைக் குழம்புத் தலையீட்டுப் பாறைகளையும் காணக்கூடியதாக இருக்கின்றது. கிழக்குப் பாகத்தில் பலியோசோயிக் கால சிலூரியன் பாறைகள். எரிமலைப்பாறைத் தலையீடுகளுடன் காணப்படுகின்றன. அயர்லாந்தின் தென் பாகத்தில் செம்மணற் படிவுகளும், நிலக்கரிப் படிவுகளும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் பாய்கின்ற முக்கியமான நதி சனென் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை 2

## காலநிலைக் காரணிகள்

பிரித்தானியா தீவுகளின் காலநிலை நிலைமைகளைச் சில காலநிலைக் காரணிகள் நிர்ணயித்து வருகின்றன. அவற்றைச் சுருக்கமாக ஆராய்வோம்.

**(அ) அத்திலாந்திக் நகர்வு:** பிரித்தானிய தீவுகளின் காலநிலையை நிர்ணயிப்பதில் அத்திலாந்திக் நகர்வு என்ற வெப்ப நீரோட்டம் வகித்து வருகின்ற செல்வாக்கு முக்கியமானதாகும். வெப்பமான குடா நீரோட்டத்தின் வடகிழக்குப் புறமான தொடர்ச்சியே அத்திலாந்திக் நகர்வு ஆகும். இந் நீரோட்டம் பிரித்தானிய தீவுகளைச் சுற்றி ஓடுகின்றது. பிரித்தானிய தீவுகள், சைபீரியச் சமவெளி அமைகின்ற அதே அகலக் கோடுகளில் இருந்தும் சைபீரியா போன்று பனிப்பாலை நிலமாக இருக்காது, மக்கள் வாழ உகந்த இடைவெப்பக் காலநிலையைக் கொண்டிருப்பதற்கு இந்த நீரோட்டமே மூல காரணமாகின்றது. மாரி காலத்திலும்கூடப் பிரித்தானிய தீவுகள் உறைபனிப் போர்வைக்குட்படாது, இளஞ்சூடானதாக விளங்குவதற்கும் இந்த வெப்ப நீரோட்டமே காரணமாகும்.

**(ஆ) தென்மேலைக் காற்றுகள் (Westerlies or Anti trade winds)** தென் மேலைக் காற்றுக்கள் என்று கூறப்படும் முரண் கடற் காற்றுக்களின் செல்வாக்கினுள் வருடம் முழுவதும் பிரித்தானிய தீவுகள் அமைகின்றன. பிரித்தானிய தீவுகளின் மழை வீழ்ச்சிக்கு தென் மேலைக் காற்றுக்களே காரணியாகும். பரந்த சமுத்திரப் பரப்பில் இருந்து வீசுகின்ற இக்காற்றுக்கள் பிரித்தானிய தீவுகளுக்கு மழை தரும் காற்றுக்களாக விளங்குகின்றன.

**(இ) அமுக்க மையங்கள்** - பிரித்தானிய தீவுகளின் காலநிலையை நிர்ணயிப்பதில் அமுக்க மையங்களும் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. மாரி காலத்தில் ஐஸ்லாந்து மீது அமைகின்ற தாழமுக்க மையமும் அசோறிஸ் மீது அமைகின்ற உயரமுக்க மையமும், கிழக்கு ஐரோப்பாவின் மீது அமைகின்ற உயரமுக்க மையமும் மாரி காலக் கால நிலைமைகளை நிர்ணயிக்கின்றன; கோடை காலத்தில் ஐஸ்லாந்து மீது அமையும் தாழமுக்க மையமும், அசோறிஸ் மீது அமைகின்ற உயரமுக்க மையமும் சூரியன் கடகக்கோட்டில் உச்சம் கொடுப்பதனால் சற்று வட புறமாக அசைந்து அமைகின்றன; இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்தில் சைபீரியா மீது பெரும் தாழமுக்க மையம் ஒன்று அமைந்துவிடுகின்றது. காற்றுக்களின் இயக்கம், திசை, வேகம் என்பவற்றை இந்த அமுக்க மையங்களே நிர்ணயிக்கின்றன.

(ஈ) முனைவு முகப்பு – பிரித்தானிய தீவுகளுக்கு வடக்கே ஐஸ்லாந்தை அடுத்து அமைகின்ற முனைவு முகப்பு, பிரித்தானிய தீவுகளின் காலநிலையில் வகித்து வருகின்ற செல்வாக்கு குறிப்பிடத் தக்கது. வெப்பமான முரண் தடக் காற்றுக்களும் குளிரான முனைவுக் காற்றுகளும் ஒன்றினையொன்று சந்திக்கும்போது ஏற்படும் பிரிதளமே முனைவு முகப்பாகும். தன்மையில் வேறுபட்ட இவ்விருவளித் திணிவுகளும் ஒன்றினையொன்று சந்திப்பதனால் ஏற்படும் பிரிதளச் சூறுவளியினால் பிரித்தானிய தீவுகள் மழையைப் பெற்றுக் கொள்கின்றன.

(உ) தரையுயர்ச்சி வேற்றுமை– பிரித்தானிய தீவுகளின் மழை வீழ்ச்சிப் பரம்பலை நிர்ணயிப்பதில். வடக்குத் தெற்காக அமைந்துள்ள உயர் நிலப் பகுதியின் பங்கு அதிகமாகும்; இம்மலைத் தடையினாலேயே பிரித்தானிய தீவுகளின் மேற்கு அரைப் பாகம் அதிக மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, அத்திலாந்திக் நகர்வு, தென் மேலைக் காற்றுக்கள் அமுக்க மையங்கள், முனைவு முகப்பு, தரையுயர்ச்சி வேற்றுமை முதலான காலநிலை நிர்ணயிப்புகளின் கூட்டு விளைவால் உருவாகும் வளிமண்டல நிலைமைகளே பிரித்தானிய தீவுகளின் காலநிலையாகும்


## வெப்பநிலை

பிரித்தானிய தீவுகளின் வெப்பநிலைப் பரம்பலில் கோடைக்கும் மாரிக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மாரிகாலத்தில் (ஜனவரி) பிரித்தானிய தீவுகளின் வெப்பநிலை மேற்கிலிருந்து கிழக்கே போகப்போகப் படிப்படியாகக் குறைவடைகின்றது. இக்குளிர் காலச் சராசரி வெப்பநிலை 45° ப. (7.2°C) ஆகும். மாரிகாலத்தில் தென் மேலைக் காற்றுக்கள் குளிர் கண்டத்துக்குரிய நிலைமைகளைத் தோற்றுவிக்கின்றன. மாரி காலத்தில் பிரித்தானிய தீவுகளின் கிழக்குப் பாகம் குளிரானதாயும்மேற்குப் பாகம் சூடான நிலைமைகளையும் கொண்டு அமைகின்றன. ( படம்: 5ஐ பார்க்க. 40° ப (4.4° C) சமவெப்பக் கோடு பிரித்தானியதீவுகளை வடக்குத் தெற்காக ஊடறுத்துச் செல்கின்றது. மாரி காலத்தின் மிகக் குளிர்ந்த மாதங்களான ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பிரித்தானிய தீவுகளின் சராசரி வெப்பநிலை 40° ப. (4.4° C) ஆகும். எனினும் மாரி காலத்தில் சிலவேளைகளில் அரிதாக உறைநிலைக்கும் கீழ் செல்வதுண்டு.

கோடை காலத்தில் (ஜூலை) பிரித்தானிய தீவுகளின் வெப்பநிலை தெற்கேயிருந்து வடக்கே போகப்போக படிப்படியாகக் குறைவடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. பொதுவாகச் சராசரி வெப்பநிலை 65°(18.3°C) ஆகவுள்ளது. 60°ப (15.6°C.) வெப்பக்கோடு பிரித்தானிய தீவுகளை கோடை யில் கிழக்கு மேற்காக ஊடறுத்து அமைகின்றது அதனால் இக் காலத்தில் இத் தீவுகளின் வடபாகம் குளிரானதாயும் தெற்குப் பாகம் சூடானதாயும் காணப்படுகின்றது வெப்ப மாதங்களான ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் சராசரி வெப்பநிலை 61° ப. (16.1°C) ஆகவுள்ளது. எனினும், வெப்பநிலை சில வேளைகளில் தென்பாகத் தில் 81° ப. (27.2°C) வரை உயர்வதுண்டு.





படம்; 5 பிரித்தானிய தீவுகளின் வெப்பநிலை - மாரி (ஜனவரி) கோடை (ஜூலை)

## மழை வீழ்ச்சி

பிரித்தானிய தீவுகள் ஆண்டுக்குரிய மொத்தச் சராசரி மழை வீழ்ச்சியாக 100 cm - களுக்கு மேல் பெறுகின்றன; எனினும் இங்கிலாந்துப் பெரும் சமவெளி பிரதேசம் ஆண்டுக்குரிய மொத்தச் சராசரி மழை வீழ்ச்சியாக ஏறத்தாழ 86 cm - மழையையே பெறுகின்றது. மலைப்பிரதேசங்களான பிரித்தானிய தீவுகளின் மேற் குப் பாகமும் வட பாகமும் அதிக மழை வீழ்ச்சியைப் பெறகிழக்குப் பாகமும் தென் பாகமும் குறைவான மழை வீழ்ச்சியை அனுபவிக் கின்றன. பிரித்தானிய தீவுகளின் மழைவீழ்ச்சி பொதுவாக வருடம் முழுவதும்நன்கு பரவலாகக் கிடைக்கின்றது மார்ச் தொட்டு ஜூன் வரையுள்ள காலமே இத்தீவுகளின் உலர் மாதங்களாகும். எனினும் 1976-ஆம் ஆண்டு பிரித்தானிய தீவுகள், 250 ஆண்டுகளுக்குப் பின்னர் கடும் வறட்சியைஅனுபவித்தன:கோடை மழை பொய்த்த மையே இந்த விதிவிலக்கான வறட்சிக்குக் காரணமாகும்; மழைக் குறைவோடு வெப்பநிலையும் உயர்வாக அவ்வாண்டு காணப்பட் டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய தீவுகளின் மழை வீழ்ச்சி மலையியன் மழையும் சூருவளி மழையுமாகக் காணப்படுகின்றது. பிரித்தானிய தீவுகளின் ஆண்டுக்குரிய மழை வீழ்ச்சிப் பரம்பல் படத்தை (படம்: 6) நோக்கினால்3 0 அங்குல (75 லே) சம மழை வீழ்ச்சிக் கோடு பெரிய பிரித்தானியாவை வடக்குத் தெற்காக ஊடறுத்து கிழக்கு-மேற்கு எனத் தெளிவான இரு மழை வீழ்ச்சி வலயங்களைத் தோற்றுவித்திருப்பதை அவதானிக்க முடியும். மேற்கு ஸ்கொட்லாந்து, வேல்ஸ், மேற்கு இங்கிலாந்து, அயர்லாந்தின் பெரும் பகுதி என்பன 76cm. களுக்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியை அனுபவிக்கின்றன. மேலும் ஸ்கொட்லாந்தின் மேற்குப் பாகமும், வேல்சின் மத்தியபாகமும் அயர்லாந்தின் தென் மேற்குப் பாகமும் 150 cm க்கு மேல் மழை வீழ்ச்சியைப் பெறுகின்றன.




படம் 6, பிரித்தானிய தீவுகளின் மழை வீழ்ச்சிப் பரம்பல்
( 30" = 75 cm, 60" = 150 cm)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய தீவுகளின் மழைவீழ்ச்சிக்குத் தென் மேலைக் காற்றுக்கள் பிரதான காரணிகளாகின்றன. நீராவி குறைந்த இக் காற்றுக்களைப் பிரித்தானிய தீவுகளின் பெனைன் மலைத் தொடர்கள் போன்ற வடக்கு - தெற்கான உயர் நிலப் பகுதிகள் தடுத்து ஒடுங்க வைக்கின்றன. ஒடுங்குவதால் காற்றுப் பக்கமான மேற்குப் பாகங்கள் அதிக மழை வீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ள, காற்றொதுக்குப் பக்கத்தில் அமைந்துள்ள -கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ள -கிழக்குப் பாகங்கள் குறைவான மழையைப் பெற்றுக் கொள்கின்றன. சூறுவளிகள் தருகின்ற மழைவீழ்ச்சியிலும் பெரும் பகுதியை மேற்குப் பாகங்களே பெற்றுக் கொள்கின்றன எனினும் மாரி காலத்தில் நிகழும் பிரிதளச் சூறுவளிகளினுல் கிழக்குப் பாகங்களும் மழையைப் பெற்றுக் கொள்கின்றன. ⊙

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலப் பயன்பாடு 3

பிரித்தானிய தீவுகளின் மொத்த நிலப்பரப்பு ஏறத்தாழ 3, 12, 494 சதுர கிலோமீற்றர் ஆகும். பிரித்தானிய தீவுகளின் உவப்பான (Mild) காலநிலைக்கும் பல்வகை மண்களுக்கும் இணங்க நிலப்பயன்பாடு அமைந்துள்ளது. பிரித்தானிய தீவுகளின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 20 சதவீதமே விளை நிலமாகக் காணப் படுகின்றது. பயிர்ச் செய்கைக்கு உகந்த விளைநிலப் பரப்பில் பெரும் பகுதி இங்கிலாந்தின் பெரும் சமவெளியில் காணப்படு கின்றது. வட அயர்லாந்து, மத்திய அயர்லாந்து, வடகிழக்கு ஸ்கொட்லாந்து முதலான பகுதிகளிலும் விளைநிலங்கள் குறிப்பிடத் தக்களவு பரந்துள்ளன. வேல்ஸ் பிரதேசத்தில் விளைநிலங்கள் மிக வும் குறைந்தளவில் காணப்படுகின்றன. பெரிய பிரித்தானியாவின் மொத்த நிலப்பரப்பில் மூன்றிலொரு பங்குப் பரப்பே விளைநில மாகும்

பித்தானிய தீவுகளில் காட்டு நிலங்கள் மிகவும் குறைவாகும். ஆரம்பத் தாவரமாகக்காடுகள் இருந்த பிரதேசங்களில் அக்காடுகள் அழிக்கப்பட்டமையினால் மாரிவளரிகளாகப் புற்கள்வளர்ந்துள்ளன. பிரித்தானிய தீவுகளின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறை 14 சதவீதம் காட்டுப் பிரதேசமாகும். பெரிய பிரித்தானியாவில் 8சத வீதமே காட்டுப்பிரதேசமாகும். குடியிருப்புகளுக்காகவும் போக்கு வரத்து வசதிகளுக்காகவும் காடுகள் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றன. அயர்லாந்து தீவில் காடு ஒரு சதவீதமளவு கூட இன்று இல்லை; ஸ்கொட்லாந்தினதும் வேல்ஸினதும் உயர் நிலப் பகுதிகளிலும், இங்கிலாந்தின் சமவெளிப் பகுதிகளிலும் பாது காக்கப்பட்ட காட்டுப் பிரதேசங்கள் அமைந்துள்ளன.

இங்கிலாந்துப் பெரும் சமவெளி, அயர்லாந்தின் பெரும்பகுதி என்பனவற்றில் நிரந்தரமான புன்னிலங்கள் பரந்து காணப்படு கின்றன; புன்னிலங்களே பிரித்தானிய தீவுகளின் நிலப்பரப்பில் பெரும்பகுதியை, ஏறத்தாழ 38 சதவீதத்தை ஆக்கிரமித்துள்ளன. ஸ்கொட்லாந்தின் உயர்நிலப்பகுதிகள், பெனையின் மலையின் உயர் பகுதிகள், மத்திய வேல்ஸ் பகுதி. அயர்லாந்தின் மேற்குப் பகுதி கள் என்பன சரம்பை நிலங்களாகவும், தரிசு நிலங்களாகவும், சதுப்பு நிலங்களாகவும். காணப்படுகின்றன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: 7. பிரித்தானிய தீவுகளின் நிலப்பயன்பாடு

## பயிர்ச்செய்கை

பிரித்தானிய தீவுகளின் தேசிய வருமானத்தில் கைத்தொழிலாக்கங்களினால் கிடைக்கின்ற வருவாய்களுடன் பயிர்ச்செய்கையால் கிடைக்கின்ற வருவாயை ஒப்பிடும்போது, பிரித்தானிய தீவுகளின் பொருளாதார வாழ்வில் பயிர்ச்செய்கை அதிக முக்கியத்துவம் பெறுதுள்ளது. பயிர்ச்செய்கை என்று குறிப்பிடும்போது அத்தீவுகளில் அதிகளவில் நடைபெற்றுவருகின்ற விலங்கு வேளாண்மையையும் உள்ளடக்கியே கருதவேண்டும். அப்படியும் ஆராயும்போது பிரித்தானிய தீவுகளின் தேசிய வருமானத்தில் 84 சதவீதம் கைத்தொழிலாக்கங்களினால் கிடைக்கின்றது; பயிர்ச் செய்கையினால் ஏறத்தாழ 7 சதவீத வருமானமே கிடைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய தீவுகளின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் 6,62,000 மக்கள் ஈடுபட்டுள்ளனர்; இது மொத்தக் குடித் தொகையில் ஏறத்தாழ 8 சதவீதமாகும்என்பது குறிப்பிடத்தக்கது. பயிர்ச்செய்கையில் பின்பற்றப்படும் நவீன விஞ்ஞான வேளாண்மை முறைகளினுல், சிறந்த முறையில் உற்பத்தி, அண்மைக் காலங்கள‌ல் அதிகரித்து வந்திருக்கின்றது. இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு முன்னர் தமது உணவுத் தேவையில் மூன்றிலொரு பங்கினையே பூர்த்தி செய்ய முடிந்த பிரித்தானிய தீவுகள் இன்று தனது உணவுத் தேவையில் அரைப் பங்கினைப் பூர்த்தி செய்து கொள்கின்றன.

ஐக்கிய இராச்சியத்தின் மொத்த நிலப்பரப்பு 1,87,34,728 ஹெக்டேயர்களாகும்; இதில் 37% பயிர்ச்செய்கைக்குகந்தது; 27% நிரந்தரப் புன்னிலமாகவும், 32% தரிசுநிலமாகவும் காணபபடுகின்றன. ஐக்கிய இராச்சியத்தில் பயிர்ச் செய்கைக்குகந்த நிலப்பரப்பு 39,60,569 ஹெக்டேயர்களாகும்; இதில் 42% நிலப்பரப்பில் கோதுமையும்,547. நிலப்பரப்பில் பார்லியும், 3% நிலப்பரப்பில் ஓட்சும், 1% நிலப்பரப்பில், சோளமும் றையும் செய்கைபண்ணப்பட்டு வருகின்றன. 2,22,024 ஹெக்டேயர் பரப்பில் தோட்டச்செய்கை நடைபெறுகின்றது. காய்கறிகள், பழவகைகள் என்பன தோட்டப் பயிர்களாகும். ஏனைய பயிர்களான உருளைக்கிழங்கு, பீற் கிழங்கு முதலியனவும் செய்கை பண்ணப்படுகின்றன.

பிரித்தானிய தீவுகளின் பயிர்ச்செய்கைப் பரப்பில் காலத்திற்குக் காலம் மாறுதல்கள் ஏற்பட்டு வந்துள்ளன. 1871-ஆம் ஆண்டு 72 இலட்சம் ஹெக்டேயர் விளை நிலமாகவும், 46 இலட்சம் ஹெக்டேயர் மேய்ச்சல் நிலமாகவும் இருந்தது; 1949-ஆம் ஆண்டு விளைநிலப் பரப்பு 46 இலட்சமாகவும், மேய்ச்சல் தரை 73 இலட்சமாகவும் மாறியது. காரணம் இக்கால கட்டத்தில் உலகின் ஏனைய நாடுகளிலிருந்து மலிவாகத் தானிய இறக்குமதி நடைபெற வாய்ப்பிருந்ததால், பிரித்தானிய தீவு விவசாயிகள் தமது விளை நிலங்களைத் தவிர்க்க முடியாத நிலையில் மேய்ச்சல் தரைகளாக மாற்றிக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிர் வகைகள்

**கோதுமை;** பிரித்தானிய தீவுகளில் அதிகளவில் கோதுமைச் செய்கை, இங்கிலாந்தின் கிழக்குச் சமவெளிப் பாகங்களிலேயே நடைபெற்று வருகின்றது; கிழக்குப் பாகங்கள், கோதுமைச் செய்கைக்கு ஏற்ற கால நிலைமைகளைக் கொண்டுள்ளன. கோடை வறட்சியும் குறைவான மழை வீழ்ச்சியும் (75 cm) பரந்த சமநிலமும் கோதுமைச் செய்கைக்கு ஏற்றனவாகவுள்ளன. இங்கிலாந்துச் சமவெளியிலும் வேல்ஸ் பகுதியிலும் 6 இலட்சம் ஹெக்டேக்யர்களுக்கு மேல் கோதுமை விளைநிலம் பரந்துள்ளது. ஸ்கொட்லாந்திலும் அயர்லாந்திலும் கோதுமைச் செய்கை குறைந்தளவில் நடைபெற்று வருகின்றது.

**பார்லி:** (வாற்கோதுமை) கோதுமைச் செய்கைக்கு உவப்பற்ற பகுதிகளில் பார்லி செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. இங்கிலாந்துப் பெரும் சமவெளியின் தென் பாகங்கள், கிழக்கு அங்கிலியா, ஸ்கொட்லாந்தின் கிழக்குச் சமவெளிப் பாகங்கள் முக்கியமான பார்லி விளைநிலங்களாகவுள்ளன. அயர்லாந்தின் தென்கிழக்குப் பகுதியிலும் பார்லிச் செய்கை நடைபெற்று வருகின்றது.

**ஓட்ஸ்;** இங்கிலாந்தின், வடகிழக்குப் பாகம், மேற்குப் பாகம் வேல்சின் தென்பாகம், ஸ்கொட்லாந்தில் மிட்லாண்ட் பள்ளத்தாக்கு, ஸ்கொட்லாந்தின் வடகிழக்குக் கரையோர வடபாகம். அயர்லாந்தின் மத்திய பாகம், கிழக்குப் பாகம் என்பனவற்றில் ஓட்ஸ் பயிரிடப்பட்டு வருகின்றது.

**உருளைக்கிழங்கு;** பிரித்தானிய தீவுகளில் உருளைக்கிழங்கு உள்ளூர்த் தேவைக்குப் போதுமானவளவு உற்பத்தியாகின்றது. இங்கிலாந்துப் பிரதேசத்தில் யோக்சயர் பகுதி, பென்லாந்துப் பகுதி, லங்காஷயர் பகுதி, ஸ்கொட்லாந்தின் வடகிழக்குச் சமவெளி, அயர்லாந்தின் மத்திய விளைநிலங்கள், வட அயர்லாந்து என்பனவற்றில் உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்பட்டு வருகின்றது.

**பழவகை:** பிரித்தானிய தீவுகளில் பழச் செய்கை கணிசமான அளவு நடைபெற்று வருகின்றது. இங்கிலாந்துப் பிரதேசத்தில் தென் மேற்குக் குடா நாடு, கான்ற் வடிநிலம், லண்டன் வடிநிலம், மத்திய சமவெளி, கிழக்கு மத்திய வேல்ஸ், ஸ்கொட்லாந்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகிழக்குக் கரை, வடஅயர்லாந்து என்பன பழச்செய்கை நடைபெறுமிடங்களாகும். சீடர் அப்பிள், ரேஸ்பேரி, ஸ்ரோபேரி, முந்திரி, கூஸ்பேரி என்பன இத்தீவுகளில் பயிரிடப்படும் பிரதான பழ வகைகளாகும்.

**பட்டுச் சணல்:** வடகிழக்கு அயர்லாந்துப் பிரதேசத்தில் பட்டுச் சணல் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது ஏறத்தாழ ... ஆயிரம் ஹெக்டேயர்கள் இச் செய்கைக்குட்படுகின்றது.

**ஏனைய பயிர்கள்;** நோபொக், சபோக், லிங்கன்சயர் எனும் பகுதிகளில் பீற்கிழங்கு அதிகம் பயிரிடப்படுகின்றது. காய்கறிகள் பிரதான நகர்ப் புறங்களில் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. கோன்வோல், டேவன் என்பன பூக்களுக்குப் பெயர் பெற்றன.

## விலங்கு வேளாண்மை

**செம்மறி ஆடுகள்:** கம்பளி உற்பத்தியில் தரத்தில் உலகிலேயே இன்றும் முதற் சிறப்பான இடத்தை வகித்து வருவது இங்கிலாந்துப் பிரதேசமாகும்; பிரித்தானிய தீவுகளில் ஏறத்தாழ 8 கோடி செம்மறியாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இச் செமமறியாடுகள் கம்பளிக்காகவும் ஆட்டிறைச்சிக்காகவும் வளர்க்கப்பட்டு வருகின்றன. புன்னிலங்கள் பிரித்தானிய தீவுகளின் பெரும்பகுதியில் நன்கு வளர்ந்திருப்பது செம்மறி வேளான்மைக்கு மிக ஏற்றதாக இருக்கின்றது. இங்கிலாந்துப் பிரதேசத்தில் உவீல்ட் சம வெளிப் பிரதேசப், தென்மேற்கு - வடகிழக்காகச்செல்லும் குத்துச் சரிவுப் பிரதேசம், ஏரி மாவட்டம் என்பனவும், ஸ்கொட்லாந்தின் தென் உயர் நிலங்கள். மத்திய உயர் நிலங்கள் (கிராம்பியன் மலைப் பகுதி) என்பனவும், வேல்ஸ் பிரதேசத்தில் கேம்பிரியன் உயர் நிலங்களும், செம்மறி வேளாண்மையில் முக்கியமானவை,

**மாடுகள்;** பிரித்தானிய தீவுகளில் ஏறத்தாழ $1\frac{1}{2}$ கோடி மாடுகளுள்ளன; மாடுகள் பாற்பண்ணை விளைவுக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கப்பட்டு வருகின்றன. இங்கிலாந்துப் பிரதேசத்தில் தென்மேற்குக் குடா, மிட்லாந்து பகுதி, தென் லங்காஷயர் பகுதி என்பனவும், வேல்ஸ் பிரதேசத்தில் தென் பகுதியும் வட பகுதியும், ஸ்கொட்லாநதின் தென் உயர் நிலத்தின் மேற்குப் பகுதியும், அயர்லாந்தின் மத்திய பகுதி என்பன மாடுகள் வளர்க்கப்படும் முக்கிய பகுதிகளாகும்.

**பன்றிகள்;** பிரித்தானிய தீவுகளில் ஏறத்தாழ 1 கோடி பன்றிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன: பன்றிகள் இறைச்சிக்காகவே வளர்க்கப்பட்டு வருகின்றன: பன்றி வளர்ப்பில் அயர்லாந்து முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய இராச்சியத்தின் வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தி வருமாறு:

பிரதான பயிர்களின் உற்பத்தி
(ஆயிரம் தொன்களில்)

| | |
|---|---|
| கோதுமை | — 10801 |
| பார்லி | — 7517 |
| ஓட்ஸ் | — 343 |
| உருளைக்கிழங்கு | — 5493 |
| பீற்கிழங்கு | — 7494 |
| பழவகை | — 3599 |

## அண்மைக்கால நிலைமைகள்

ஐக்கிய இராச்சியத்தின் வேளாண்மையில் அண்மைக் காலத்தில் பல அபிவிருத்தி நிலைமைகளை அவதானிக்கலாம். அவை

1. வேளாண்மை உற்பத்தியில் தன்னிறைவுப் போக்கினை நோக்கிய விருத்தி காணப்படுகின்றது. பின்வரும் அட்டவணையை அவதானிக்கில் 1969 ஆண்டின் தாழ்நிலைமையும் 1982 ஆம் ஆண்டின் விருத்திநிலையையும் புரிந்து கொள்ளலாம்.

மொத்த நுகர்வில் தேசிய உற்பத்தியின் பங்கு

| உற்பத்தி | | 1969 | 1982 |
|---|---|---|---|
| கோதுமை | — | 42% | 96% |
| பார்லி | — | 90% | 130% |
| உருளைக்கிழங்கு | — | 91% | 96% |
| பீற்கிழங்கு | — | 33% | 49% |
| பாற்கட்டி | — | 45% | 71% |
| வெண்ணெய் | — | 12% | 49% |
| மாட்டிறைச்சி | — | 77% | 83% |

கோதுமைத் தேவையில் 1969 ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்தில் 42% உற்பத்தியாகியது; ஆனால், இன்று 96% உற்பத்தியாகின்றதுஎன்பது பெரு விருத்தியாகும். அவ்வாறே ஏனைய உற்பத்திகளிலும் விருத்திப் போக்கினைக் காணலாம்.

2. ஐக்கிய இராச்சியத்தின் வேளாண்மைக்குரிய சிறிய விளைநிலங்கள், படிப்படியாக ஒன்றிணைக்கப்பட்டு பெரிய நிலவுடைமைகளாக்கப்பட்டுள்ளன. இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 1940 ஆம் ஆண்டில் சராசரி நிலவுடைமை 33.8 ஹெக்டேயர்களாக விருந்தது. இன்று சராசரி நிலவுடைமை 60.2 ஹெக்டேயர்களாக உயர்ந்துள்ளது. ஸ்கொட்லாந்தில் 1940 இல் சராசரி நிலவுடைமை 81·8 ஹெக்டேயர்களாகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று 96 2 ஹெக்டேயர்களாகியுள்ளது. வட அயர்லாந்தில் 1940 இல் 13.7 ஹெக்டேயர்களாக இருந்த சராசரி நிலவுடைமை, இன்று 24 2 ஹெக்டேயர்களாக விரிந்துள்ளது. அதனல், கமத்துண்டுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது 1940 இல் ஐக்கிராச்சியத்தில் ஏறத்தாழ 5 இலட்சம் நிலவுடைமையாளர்கள் இருந்தனர். 980 இல் $2\frac{1}{3}$ இலட்சம் நிலவுடைமையாளர்களாகி விட்டனர்.

3. நவீன செய்கை முறைகள் (பசளை உபயோகம்) கிருமி நாசினி, களைகொல்லி, உயர் தொழிநுட்பம், ஐக்கிய இராச்சியத்தின் ஹெக்டேயருக்குரிய விளைச்சலை அதிகரிக்க வைத்துள்ளன. 1939 இல் ஹெக்டேயருக்குரிய கோதுமை விளைச்சல் 2.5 தொன்னுகும், 1983 இல் ஹெக்டேயருக்குரிய கோதுமை விளைச்சல் 6 தொனளுக உயர்ந்துள்ளது. ஹெக்டேயருக்கு 25 தொன் விளைச்சலாகிய பீற்கிழங்கு 1983 இல் 37 தொன்னுக உயர்ந்தது. 1939 இல் 18 தொன் விளைந்த உருளைக்கிழங்கு, 1983 இல் ஹெக்டேயருக்கு 31 தொன்னுக விளைந்தது. இதற்குக் காரணம் நவீன செய்கை முறைகளின் விளைவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிப் பொருட்களும் கைத்தொழில்களும் 4

பெரிய பிரித்தானியா உலகின் குறிப்பிடத்தக்க கைத்தொழில் நாடுகளில் ஒன்றாகும். பெரிய பிரித்தானியாவின் ஏற்றுமதியில் 80 சதவீதத்திற்கு மேல் பரும்படியாக்கப் பொருட்களும், பெரிய பிரித்தானியாவின் தொழிலாளர்களில் ஏறத்தாழ 52 சதவீதமான வர்கள் கைத்தொழில்கள், சுரங்கத் தொழில்கள், கட்டிட தொழில்கள், வலுத் தொழில்கள் என்பனவற்றில் ஈடுபட்டுள்ளனர்

பெரிய பிரித்தானியாவின் கைத்தொழில் உரிமை, நிர்வாகம், கட்டுப்பாடு என்பன பல்வேறுபட்டன. கைத்தொழிற்சாலைகள் தனியார் உடைமை, கூட்டுடைமை, கூட்டுறவு உடைமை, அரசாங்க உடைமை என்ப் பல்வேறு வகைப்பட்டுள்ள உடைமை நிலை நிலவிய போதிலும், 'இவை யாவும் நாட்டின் பொருளாதார விருத்திக்கு அவசியமானவை என்றே இங்கு கருதப்பட்டுவருகின்றது. பெரிய பிரித்தானியாவில் இரும்புருக்குத தொழில் தவிர்ந்த ஏனைய கைத் தொழிலாக்கங்கள் யாவும் தனியார் உரிமைகளாகவே நடாத்தப் பட்டு வருகின்றன.

பொருளாதார வளம் கருதி, பல கைத்தொழில்கள் ஒருங், கிணைந்து பெரியவிலான கைத்தொழில்களாக அண்மைக் காலங் களில் இயங்கி வருகின்றன. இத்தகைய இணைப்பின் காரணமாக கைத்தொழில்களின் அளவிலும் அமைப்பிலும் பெருமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன: மோட்டார் கார்த்தொழில், விமானத் தொழில், மின்சாரத் தொழில் நுட்பவியல், கம்பியூட்டர்த் தொழில்; நெசவுத் தொழில், குடிவகைத் தொழில் என்பனவற்றில் மாற் றங்கள் நிகழ்ந்துள்ளன. ஐரோப்பாவிலுள்ள 20 பெரிய கைத்தொழிற் தொகுதிகளில 4 பிரித்தானியாவிலுள்ளன.

## கனிப்பொருட்கள்

பெரிய பிரித்தானியா கைத்தொழிலாக்கங்களில் விருத்தியுற்ற நாடாக விளங்குகிறது. இந்த நாட்டின் கைத்தொழில் விருத்திக்கு மூலகாரணமாக விளங்குவது அந்த நாட்டில் கிடைக்கின்ற கனிப் பொருட்களாகும். நிலக்கரி, சிறிதளவு கிடைக்கும் இரும்புத்தாது பெற்றோலியம் ஆகிய மூன்று பிரதான வளங்களும் பிரித்தானியா வில் கிடைக்கின்றன.

**(அ) நிலக்கரி:** பெரிய பிரித்தானியாவின் கைத்தொழில் விரு த்திக்கு அடிப்படைக் காரணமாக விளங்குவது நிலக்கரியாகும் பிரித்தானியாவின் கைத்தொழில் மையங்கள்கள் யாவும் நிலக்கரிச் சுரங்கங்களை அடுத்து அமைந்திருக்கின்றன. பிரித்தானியாவில் முக்கியமாக பதின்மூன்று நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஸ்கொட்லாந்துத் தாழ் நிலம்; பெரிய பிரித்தானியாவில் அகழ்தெடுக்கப்படும் நிலக்கரியில் 5% இங்கிருந்து கிடைக்கிறது லானர்க்சயர், பிப்சயர், மிடலோதியன் என்பன முக்கியமான நிலக்கரி வயல்களாகும்.

2. நொதம்பர்லாண்ட்- டேகாம் வயல்கள்: (வடகிழக்கு வயல்) பிரித்தானியாவின் நிலக்கரியில் 10% இந்த வயல்கள் உற்பத்தி செய்கின்றன. பெனைன் மலைத்தொடருக்குக் கிழக்குப் பாகத்தில் இந்த வயல்கள் அமைந்திருக்கின்றன. இந்த வயல்களின் தொடர்ச்சி வடகடலிலும் உள்ளது. கடலின் கீழிருந்தும் நிலக்கரி அகழப்படுகிறது.

3. மேலே வயல்கள்: லங்காசயர் நிலக்கரி வயல்கள் இதனுள் அடங்குகின்றன. பெரிய பிரித்தானியாவில் 8°/。 நிலகரியை இவை வழங்குகின்றன. லங்காசயரில் வைகன் நகரைச் சூழ்ந்து நிலக்கரி வயல்கள் அமைந்துள்ளன.

4. தெண் வேல்ஸ் வயல்கள்: இவை ஐக்கிய இராச்சியத்தில் இன்று 6°/。 நிலக்கரியை உற்பத்தி செய்கின்றன.

5. வட யோர்க்சயர் வயல்கள்; இவை நிலக்கரி உற்பத்தியில் 7°/。 நிலக்கரியை வழங்குகின்றன.

6. டொன்காஸ்ரர் வயல்கள்:

7. பார்ன்ஸ்லே வயல்கள

8. தெண் யோக்சயர் வயல்கள்

9. வட டேபிசயர் வயல்கள

10 வட நொற்றிகாம் வயல்கள்:

11. தென்நொற்றிகாம் வயல்கள்

வடயோக்சயர் வயல்களிலிருந்து தென் நொற்றிங்காமம் வயல்கள் வரையிலான 7 நிலக்கரிவயல்களையும் யோக்சயர்—நொங்ஙிங்காம் வயல்கள் என வழங்குவர். இவை அனைத்தும் ஐக்கிய இராச்சியத்தின் நிலக்கரி உற்பத்தியில் 46°/。 வழங்குகின்றன.

12. மிட்லாந்து வயல்கள்: பெரிய பிரித்தானியாவில் 6சதவீத நிலக்கரியை இவை உற்பத்தி செய்கின்றன. வட ஸ்ராபோட்சயர் தென் ஸ்ராபோட்சயர் என்பன குறிப்பிடத்தக்க நிலக்கரி வயல்களாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கென்ற் வயல்கள் கிழக்கு கென்ற் பிரதேசத்தில் காணப்படும் கென்ற் வயல்கள் பிரித்தானியாவின் நிலக்கரி உற்பத்திக்கு 1°/。 வழங்குகின்றன.

பிரித்தானியாவின் நிலக்கரி வயல்கள் சுத்தான படுக்கையைக் கொண்டனவாகவும், ஆழமானவையாகவும் உள்ளன. இங்குள்ள நிலக்கரி புகைமிகு நிலக்கரியாகவும் அந்திரசைற் நிலக்கரி வயினவாகவும் இருப்பதால் தரத்தில் சிறந்தன.

ஐக்கிய இராச்சிய நிலக்கரி உற்பத்தி
( மில்லியன் தொன்களில் )

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்கொட்லாந்து | — | 5.3 |
| 2. | வட கிழக்கு | — | 10.9 |
| 3 | மேலேவயல்கள் | — | 9.1 |
| 4. | தென்வேல்ஸ் | — | 6.6 |
| 5. | வட யோக்சயர் | — | 7.7 |
| 6. | டொன்காஸ்ரர் | — | 5.8 |
| 7. | பார்ன்ஸ்லே | — | 3 6 |
| 8. | தென் யோக்சயர் | — | 6.6 |
| 9. | வடடேபிசயர் | — | 6.3 |
| 10. | வடநொற்றிங்காம் | — | 11.6 |
| 11. | தென் நொற்றிங்காம் | — | 6.6 |
| 12. | மிட்லாந்து | — | 6.6 |
| 13. | கென்ற் | — | 0.7 |
| | மொத்தம் | — | 90.4 |

(ஆ) இரும்புத்தாது; பெரிய பிரித்தானியாவில் இரும்புத்தாது வயல்கள் மிகவும் பழமையானவை. அதனால் வளமான இரும்புத்தாதுப் படிவுகளில் பெரும்பாலானவை அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. எனவே இன்று அதன் உற்பததி குறைவாகும். உலக இரும்புத்தாது உற்பத்தியில் பெரிய பிரித்தானியா 6% வழங்கி வருகிறது. பெரிய பிரித்தானியாவில் கிளீவ்லாண்ட் சுரங்கம், மிட்லான்ட் சுரங்கம், ஸ்கொட்லாந்துச் சுரங்கம், ஸ்கொட்லாந்துத் தாழ் நிலச்சுரங்கம், கம்பலாண்ட் சுரங்கம் என்பன குறிப்பிடத்தக்கன இன்று பிரித்தானியாவில் உற்பத்தியாகும் இரும்புத்தாது இரும்புருக்கு ஆலைகளுக்குப் போதுமானதல்ல, அதனால் இன்று பிரித்தானியா கணிசமான அளவு இரும்புத்தாதை இறக்குமதி செய்து தனது இரும்புருக்குகளை இயக்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) பெற்றோலியம்: பெரிய பிரித்தானியாவிற்கு வருடாவருடமும் 8 கோடி தொன் பெற்றோலியம் தேவைப்படுகின்றது; இதில் ஆக 10 இலட்சம் தொன் பெற்றோலியம்தான் உள்நாட்டில் உற்பத்தியாகின்றது. மிகுதி இறக்குமதியாகின்றது. பிரித்தானியாவில் நிலக்கரி வளமிருக்கிற அளவிற்குப் பெற்றோலியம் இல்லை. பெற்றோலியத்திற்கு அண்மைக் காலத்தில் ஏற்பட்ட தட்டுப்பாடுகளும் முக்கியமாக விலையுயர்வும் பிரித்தானியாவைப் பெற்றோலிய வளங்களைக் கண்டுபிடிக்கத் தூண்டின அதன் விளைவாகக் கண்டுபிடிக்கப் பட்டவையே இன்று வடகடலில் இயங்கி வரும் பெற்றோலியக் கிணறுகளாகும்.

வடகடலின் கண்ட மேடைகளில் பெரிய பிரித்தானியாவின் எண்ணெய்க் கிணறுகள் அமைந்திருக்கின்றன. நீண்ட கால பரிசோதனைகளின் பின்னர் வடகடலின் கண்ட மேடைகளில் பெற்றோலியமும் இயற்கை வாயுவும் இருப்பது கண்டறியப்பட்டு இன்று உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இன்னும் இரு வருடங்களில் பிரித்தானியா தனது சுயதேவைக்குத் தேவையான பெற்றோலியத்தை வடகடலில் இருந்து பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடகடல் கண்டமேடை வயல்களில் உற்பத்திச் செலவு அதிகமாகும். ஏனெனில் சமுத்திரப் பரப்பில் டெரிக் எண்ணெய்க் கோபுரம் அமைப்பதும், தங்குவதற்கு மிதக்கும் மேடைகள் அமைப்பதும், அதிக செலவினை உண்டாக்குகிறது. எனினும் பெற்றோலியத்திற்கு இன்று இருக்கிற விலையுயர்வு வடகடல் பெற்றோலிய உற்பத்திக்குத் தூண்டியுள்ளது.

வடகடலில் இன்று ஐக்கிய இராச்சியத்தின் பெற்றோலியக் கிணறுகள் உற்பத்தி செய்து வருகின்றன, அவை;


1. திஸ்ரில் (Thistle), ஸ்ராட்பியோட் (Statfjord), பிறென்ற் (Brent), ரேண் (Tern), கோமோறன்ற் (Cormorant), ஹற்றன் (Hutton), ஹீத்தர் (Heather), நிமான் (Niman), அல்வின் (Alwyn) தொகுதி.

இத் தொகுதியில் பெறப்படும் பெற்றோலியன் குழாய் வழி செற்லாண்ட் தீவிலுள்ள சுலொம் வோவ் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

2. கிறுங்போட் (Crawford), டைப்பர் (piper), கிளேமோர் (Claymore), தெல்மா (Thelma) அன்ட்று (Andrew) புச்சான் (Buchan) தொகுதி.

இத் தொகுதியிலுற்பத்தியாகும் பெற்றோலியம் ஓர்க்னிதீவிலுள்ள புலோற்று துறைக்குக் குழாய் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: ஐக்கிய இராச்சியத்தின் வலுவிளக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பீற்றைஸ் (Beatrice) கிணறு: இங்கிருந்து உற்பத்தியாகும் பெற்ரோலியம் நிக்பே துறைமுகத்திற்கு எடுத்துச்செல்லப்படு கின்றது.

4. போட்டீஸ் (Forties), மொன்ரோஸ் (Montros) லோமண்ட் (Lomond) தொகுதி — இங்கிருந்து பெற்ரோலியம் குறுடன்பே துறைக்கு எடுத்துச்செல்லப்படுகின்றது.

5. அவுக் (Auk), இன்னீஸ் (Innes), ஆர்க்யில் (Argyll), எல்ட் பிஸ்க் (Eldfisk), எகோபிஸ்க் (Ekofisk), ரோபெல்ட் (Torfeld), எடா (Edda), யோசபைன் (Josephine), அல்பஸ்க்யெல் (Albus-kjell) - தொகுதி

இத்தொகுதியிலுற்பத்தியாகும் பெற்ரோலியம் குழாய் வழி, ரீஸ்சயிட் துறைமுகத்திற்கு எடுத்துச்செல்லப்படுகின்றது.

இவற்றைவிட புரூஸ் (Bruce), பெயில் (Beryl) கொட் (Cod), உலா (Ula) முதலான பெற்ரோலியக், கிணறுகளும் வடகடலி லுள்ளன.

ஐக்கிய இராச்சியம் உற்பத்திசெய்யும் வடகடல் பெற்ரோலி யத்தை, துறைமுகங்களை அடுத்துள்ள சுத்திகரிப்பு ஆலைகள் சுத்தி கரிக்கின்றன. எடின்பேக், ரீஸ்சயிட், ஈசிங்ரொான், கான்வேதீவு, ஃபாவுலே (Fawley), மில்போர்ட், கெவென், லிவப்பூல், ஹன் ரஸ்ரோன், பெல்பாஸ்ற் முதலிய துறைமுகங்களில் சுத்திகரிப்பு நடைபெறுகின்றது.

(இ) இயற்கை வாயு; பெற்ரோலியக் கிணறுகள் வடகடலில் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து, இயற்கைவாயு உற்பத்தியும் ஐக்கிய இராச்சியத்தில் முதன்மை பெற்றுள்ளது. பிறெண்ற் (Brent) பிரிக் (Frigg), ஓடின் (Odin), ஹெயிம்டால் (Heimdal), கொட் (Cod), போபெஸ் (Forbes), எஸ்மண்ட் (Esmond), கோடோன் (Gordon), றஃப் (Rough), மேற்கு சோல் (West Sole), ஆன் (Ann), வைகிங் (Viking), பிரேக்கின் பாங் (Broken Bank), லெமன் பாங் (Leman Bank), சியன் (Sean), டொற்றி (Dottie), ஹெவெற் (Hewett) முதலியன பிரதான இயற்கைவாயு வயல் களாகும். இவ்வயல்களிலிருந்து உற்பத்தியாகும், இயற்கை வாயு, சென் போர்க்ஸ், எசிங்ரன், தெட்டல்திரேப், பக்ரொன் முதலான துறைமுகங்களுக்கு குழாய்கள் மூலம் எடுத்துச்செல்லப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனைய சக்தி வளங்கள்

ஐக்கிய இராச்சியத்தின் பிரதான சக்தி மூலவளங்களாக நிலக்கரி, பெற்றோலியம், இயற்கைவாயு என்பன விளங்குகின்றன என்பதனை ஏற்கனவே கறரோம். இவற்றைவிட நீர்மின்சக்தி, அணுமின்சக்தி, வெப்பமின்சக்தி என்பனவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(அ) நீர்மின்சக்தி: ஸ்கொட்லாந்தில் நீர்மின்சக்தி நிலையங்கள் அதிகளவிலுள்ளன. நீஸ்நதி, டொன்நதி என்பவற்றில் இந்நீர்மின்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வேல்ஸ் பிரதேசத்தின் வடபிரதேசத்திலும் நீர்மின் நிலையங்களுள்ளன.

(ஆ) அணுமின் சக்தி: ஐக்கிய இராச்சியத்தில் சப்பல்குரொஸ், செல்லா பீல்ட், வைல்ஃபா, கிங்லே பொயின்ற், வின்பிறித், பிருட்வெல், சயிஸ்வெல் முதலிய நகரங்களில் அணு மின் சக்தி நிலையங்கள் அமைந்துள்ளன

(இ) வெப்பமின்சக்தி; வெப்பமின்சக்தி நிலையங்கள் கிளாஸ்கோ எடின்பேர்க், லிவப்பூல், செபீல்ட், பேமிங்காம், யோக்சயர் நொற்றிங்காம், லண்டன் முதலான நகரங்களிலுள்ளன.

சக்திவளஉற்பத்தி; 1950 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தில் நிலக்கரி உற்பத்தி 220 மில்லியன் தொன்னாக இருந்தது. இந்த அளவு 195 வரை சீராக இருந்தது. பின்னர் படிப்படியாக வீழ்ச்சியடைந்து 1984 இல் 100 மில்லியன் மெற்றிக் தொன்னாகக் குறைந்துள்ளது. 1950 ஆம் ஆண்டுகளில் மின்சக்தி உற்பத்தி 5மில்லியன் தொன் (நிலக்கரிக்குச் சமன்படுத்தி) 1984 இல் இந்த அளவு 110 மில்லியன் தொன்களாக உயர்ந்துவிட்டது. 1966 ஆம் ஆண்டு தான் ஐக்கிய இராச்சியத்தில் கணிசமானவளவில் இயற்கைவாயு உற்பத்தி ஆரம்பமானது. இன்று 50 மில்லியன் தொன் இயற்கைவாயு உற்பத்தியாகிறது. 1975ஆம் ஆண்டு தொட்டு வடகடல் பெற்றோலியக்கிணறுகள் பெற்றோலியத்தை வழங்குகின்றன. பெற்றோலிய உற்பத்தி படிப்படியாக அதிகரித்து, இன்று 210 மில்லியன் தொன்களாக உயர்ந்துள்ளது.

சக்திநுகர்வு; ஐக்கிய இராச்சியத்தில் 1950 ஆம் ஆண்டளவில் நிலக்கரியே சக்திநுகர்வில் 50% ஆக இருந்தது. ஆனால் இன்று சக்தி நுகர்வில் 43% பெற்றோலியமாகும். 25% நிலக்கரியாகவும் 25% இயற்கைவாயுவாகவும், 7% மின்சக்தியாகவும் உள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில்கள்

பெரிய பிரித்தானியாவின் ஏற்றுமதியில் 80% பரும்படியாக்கப் பொருட்களாகும். தேசிய வருவாயில் 84% கைத்தொழிற் பொருட்களினுல் கிடைக்கின்றது. மக்களில் 52% கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர் பிரித்தானியாவில் (அ) இரும்புருக்குத் தொழில், (ஆ) நெசவுத் தொழில், (இ) கப்பல் கட்டுந்தொழில் (ஈ) இரசாயனத் தொழில்கள் என்பன முக்கியமானவை.

(அ) பெரிய பிரித்தானியாவின் இரும்புருக்குத் தொழில்:

19-ஆம் நூற்றுண்டில் இறுதி வரையில் இரும்புருக்கு உற்பத்தியில் பெரிய பிரித்தானியாவே முதன்மை பெற்ற நாடாக விளங்கியது. இன்று பிரித்தானியா இரும்புருக்கு உற்பத்தியில் ஐந்தாமிடத்தைப் பெற்றிருக்கின்றது. பெரிய பிரித்தானியா வருடா வருடம் ஏறத்தாழ 2½ கோடி தொன் இரும்புருக்கினை உற்பத்தி செய்து வருகின்றது. இது யப்பானின் இரும்புருக்கு உற்பத்தியிலும் பார்க்க நான்கிலொரு பங்கிற்கும் சற்று அதிகமாகும். நிலக்கரி போதியளவு கிடைப்பது, இரும்புத்தாது கணிசமானவளவு இருந்தமை, திறமையும் தொழில் நுட்பமும் வாய்ந்த தொழிலாளர்கள், சிறந்த ஏற்றியிறக்கும் துறைமுக வசதிகள் என்பன பிரித்தானியாவின் இரும்புருக்குத் தொழிலை விருத்தியுற வைத்துள்ளன

பெரிய பிரித்தானியாவின் இரும்புருக்கு மையங்கள் பின்வருவனவாகும்:


1. ஸ்கொட்லாந்துப் பிரதேசம்
2. வடகீழ்ப் பிரதேசம்
3. யோக்சயர்-நொற்றிங்காம்-டேபிப் பிரதேசம்
4. லங்காசயர் பிரதேசம்
5. மிட்லாந்துப் பிரதேசம்
6. தென் வேல்ஸ் பிரதேசம்

இந்த இரும்புருக்கு மையங்கள் யாவும் நிலக்கரி வயல்களை ஆதாரமாகக் கொண்டு அமைந்திருக்கின்றன. ஸ்கொட்லாந்துத் தாழ்நில நிலக்கரி வயலில் ஸ்கொட்லாந்து இரும்புருக்கு மையங்களுள்ளன. வடகீழ்ப் பிரதேசத்தில் நியூகாசில் முக்கியமான இரும்புருக்கு மையம். இது நொகம்பர்லான்ட்-டேகாம் நிலக்கரி வயலில் அமைந்திருக்கின்றது. இப்பிரதேசம் தனக்குத் தேவையான இரும்புத் தாதை லிங்கன்சயர் என்ற இடத்திலிருந்து பெற்றுக்கொள்கின்றது. யோக்சயர், நெற்றிங்காம் டேபி பிரதேசம், யோக்சயர் நிலக்கரி வயலிலும், லங்காசயர் பிரதேசம், லங்காசயர் நிலக்கரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்; 9
ஐக்கிய இராச்சிய கனிப்பொருட்கள்




படம்; 10
ஐக்கிய இராச்சியகைத்தொழில் மையங்கள்

வயலிலும். மிட்லாந்துப் பிரதேசம். மிட்லாந்து நிலக்கரி வயலிலும் அமைந்திருக்கின்றன. தென் வேல்ஸ் பிரதேசம் அமைந்திருப்பதும் நிலக்கரி வயலிலேயே ஆகும்.

பெரிய பிரித்தானியாவில் நிலக்கரி இருக்கின்ற அளவிற்கு இரும்புத்தாது வளமில்லை, உலக உற்பத்தியில் 6% இரும்புத்தாதே பெரிய பிரித்தானியாவில் இருக்கின்றது. பிரித்தானியாவில் இருக்கின்ற இரும்புத்தாது போதாமையால் வெளிநாடுகளிலிருந்து இரும்புத்தாதை இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. அதனால் தொழிற்சாலைகள் துறைமுக வசதி கொண்ட கரையோரங்களில் அமைந்திருக்கின்றன. இன்று பெரிய பிரித்தானியாவில் பயன்படுத்தப்படும் இரும்புத்தாதில் 90% இறக்குமதி செய்யப்பட்டதாகும். சுவீடன், கனடா, வட ஆபிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து இரும்புத்தாது இறக்குமதி செய்யப்படுகின்றது.


பெரியபிரித்தானியாவில் இரும்புருக்கு உற்பத்தி சிறிதளவு வீழ்ச்சியடைந்து வருகின்றது. ஆரம்பத்தில் இரும்புருக்கில் முதலாவது நாடு பிரித்தானியாவாகும். 1965-இல் பிரித்தானியாவில் 2 கோடியே 70 இலட்சம் தொன் இரும்புருக்கு உற்பத்தியாகியது. இன்று 2 கோடியே 50 இலட்சம் தொன் இரும்புருக்கு உற்பத்தியாகி வருகின்றது.

இரும்புத்தாதை இறக்குமதி செய்வதால் பிரித்தானியா சிறந்தரக இரும்புருக்கை இன்று உற்பத்தி செய்து வருகின்றது. அதற்காக குரோமியம், மங்கனீஸ், நிக்கல் போன்ற கலப்பு உலோகங்களையும் கழிவு இரும்பையும் இறக்குமதி செய்து வருகின்றது. இன்று பிரித்தானியாவின் மொத்த ஏற்றுமதியில் 50% இரும்புருக்குப் பொருட்களாகும்.

## (ஆ) நெசவுத் தொழில்

பெரிய பிரித்தானியாவில் பருத்தி நெசவுத்தொழிலில் முக்கியத்துவம் வாய்ந்த மையம் லங்காசயராகும். லங்காசயர் ஆரம்பத்தில் கம்பளி நெசவில் தான் ஈடுபட்டிருந்தது: பின்பே பருத்தி நெசவில் ஈடுபட்டது. பருத்தி நெசவிற்குத் தேவையான பருத்திப் பஞ்சைத் தனது சாம்ராச்சிய நாடுகளிலிருந்து மலிவாகவும் ஏராளமாகவும் பெறமுடிந்தது. லங்காசயர் பிரதேசம் லிவப்பூல், மஞ்செஸ்ரர் ஆகிய இரு நகர்களைச் சூழ்ந்து அமைந்துள்ளது. லிவப்பூர் நல்லதொரு துறைமுகமாகும். மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய வாய்ப்பாகவுள்ளது. இங்கிருந்து மஞ்செஸ்ரர் நகர் வரை கால்வாய் வசதியுள்ளது. அதனால் நேரடியாக மஞ்செஸ்ரர் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களைக் கொண்டு செல்வதற்கும், உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் வாய்ப்பாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்; 14 பிரித்தானியத்தீவுகளின் கைத்தொழில்கள்

லங்காசயரில் போதிய நீர்மின் வலுவும் கிடைக்கிறது. இப்பிரதேசத்தின் ஈரலிப்பான காலநிலை நூல் நூற்பதற்கு வாய்ப்பானது. பிரித்தானியா குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்ததால் உற்பத்தியான பருத்தித் துணிகளைச் சந்தைப்படுத்துவதற்கு வசதிகள் இருந்தன. இவை யாவும் லங்காசயரைப் பருத்தி நெசவில் முதன்மை பெற வைத்தன. இன்று உலக நாடுகள் பலவற்றிலும் பருத்தி நெசவுத் தொழில் விருத்தியுற்றதால் லங்காயரின் நெசவுத் தொழில் பாதிப்புற்றது. அதனால் இன்று லங்காயர் விலைமதிப்புள்ள தரமான துணி வகைகளை நெசவு செய்து வருகின்றது.

யோக்சயர் என்ற பிரதேசத்தில் கம்பளி நெசவுத்தொழில் மிக முக்கியமான தொழிலாகும். பெனைன் மலைப்பிரதேசப் புல்நிலங்களில் செம்மறியாடுகள் வளர்க்கப்படுகின்றன. அதனால் கம்பளி நெசவிற்குத் தேவையான கம்பளிக்குத் தட்டுபாடில்லை. யந்திரங்களை இயக்க இப் பிரதேசத்தில் நிலக்கரி இருக்கிறது. கம்பளி நெசவில் காலம் காலமாக அனுபவம் வாய்ந்த தொழிலாளரும் பரந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தையும் இப்பிரதேசத்தில் உள்ளன. கெயிக்லி, பிருட்போர்ட், லீட்ஸ், டொன்காஸ், வேக்பீல்ட் என்றநகர்களில் கம்பளி உற்பத்தி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

## (இ) கப்பல் கட்டும் தொழில்

பெரிய பிரித்தானியா கப்பல் கட்டுந் தொழிலில் விருத்தியும் றிருக்கும் நாடுகளில் ஒன்றாகும். வசதியான துறைமுகங்கள் அமைந்திருப்பதும், அயலில் இரும்புருக்குத் தொழில் விருத்தியுற்றிருப்பதும், தற்கால வர்த்தகம் விருத்தியுற்றிருப்பதும் பிரித்தானியாவின் கப்பல் கட்டும் தொழிலிற்குப் பெருமுதவியாகவுள்ளன. ஒவ்வோர் ஆண்டும் உலகில் கட்டப்படும் கப்பல்களின் தொன் நிறையில் 50% தொன்நிறைக் கப்பல்களைப் பிரித்தானியாவே கட்டி வருகின்றது. இங்கு ஐந்து பிரதேசங்கள் கப்பல் கட்டுந் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன அவை 1. வடகீழ்க் கடற்கரை 2 கிளைட் பொங்கு முகம், 3. பெல்வர்ட், 4. பேக்கன் கெட், 5 பரோ என்பனவாகும்.

வடகீழ் கடற்கரையில் போர்க் கப்பல்களும் சிறிய நீராவிக் கப்பல்களும் எண்ணெய் தாங்கிக் கப்பல்களும் கட்டப்படுகின்றன. கிளைட் பகுதியில் பிரயாணக் கப்பல்கள் கட்டப்படுகின்றன பெல்வாச் பிரதேசத்தில் பிரயாணக் கப்பல்களும், பண்டமேற்றுங் கப்பல்களும் கட்டப்படுகின்றன. ரேப் பகுதியில் கடற்படைக் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் என்பன கட்டப்படுகின்றன. இந்த ஐந்து பகுதிகளையும்விட பிரித்தானியாவில் அபடீன், தண்டி சவுதாம்ரன், போட்சுமத், சதாம் ஆகிய துறைமுகங்களிலும் கப்பல் கட்டுந் தொழில் நடைபெற்று வருகின்றன.

## (ஈ) மீன்பிடித் தொழில்

இடைவெப்பச் சமுத்திரப் பாகங்களில் அமைந்திருக்கும் நான்கு முக்கியமான மீன் பண்ணைகளில் ஒன்றாகிய வடகடல் மீன் பண்ணையில் பிரித்தானிய திவுகள் அமைந்திருக்கின்றன. பிரித்தானியாவில் மீன்பிடித்தொழில் நன்கு விருத்தியுற்றிருப்பதற்குப் பின்வருவன காரணங்களாகும்.

1. வடகடல் மீன் பண்ணைகளின் மத்தியில் அமைந்திருப்பது முதற்காரணமாகும். பிஸ்கே குடாவிலிருந்து நோர்வேயின் வட பகுதி வரை வடகடல் மீன்பண்ணை பரந்துள்ளது. இம் மீன் பண்ணையில் சிறந்த மீன் வளத்தைக்கொண்ட கடலடித்தள மேடைகள் அமைந்திருக்கின்றன. உலகில் மிகப் பிரதான கடலடித்தள மேடையான டொக்கர்பாங், பிரித்தானியாவிற்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கே அமைந்துள்ளது. இது 225 கிலோ மீற்றர் நீளமும் 100 கிலோ மீற்றர் அகலமும் கொண்டது. பிளாங்ரன் உணவுகள் இங்கு அதிகளவில் விருத்தியாகின்றன. கெறிங், கொட் மீன் வகைகள் அதிகமுள்ளன.

2. பெரிய பிரித்தானியாவில் பயிர்செய்கைக்குகந்த நிலங்கள் குறைவு இங்கிலாந்துச் சமவெளியை விட்டால் வேறு நல்ல விளை நிலங்களில்லை. அதனால் பிரித்தானிய மக்கள் பலர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

3. பிரித்தானிய கரைகளில் எண்ணிறைந்த துறைமுகங்கள் மீன்பிடிக்குச் சாதகமாக அமைந்திருக்கின்றன. நீண்ட கடற்கரையோரம் பிரித்தானியாவில் இருக்கின்றது. அத்துடன் பனிக்கட்டியாற்றரிப்பினால் உருவாகிய நுழைகழித்துறைமுகங்களும் அதிகம் பல்லுருவக் கடற்கரைகள் மீன்பிடிக் கலங்கள் பாதுகாப்பாகத் தங்க வசதியளிக்கின்றன.

4. பிடிக்கின்ற மீன்களுக்கு இருக்கின்ற உடனடிச் சந்தை வாய்ப்புகளும், வர்த்தக ரீதியான தகரத்தில் மீன்களையடைக்கும் கைத்தொழிலும் ஓரளவு பிரித்தானியத் தீவுகளின் மீன்பிடிக்குத் துணைபுரிகின்றன. அத்துடன் கப்பல் கட்டுந்தொழிலும் நன்கு விருத்தியுற்றிருப்பது மீன்பிடிக்கு வாய்ப்பானது.

நவீன வசதிகளுடன் யந்திர வள்ளங்களிலும், கப்பல்களிலும் சென்று பிரித்தானிய மக்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கின்றனர். பலநாட்கள் கடலில் தங்கி மீன்பிடித்துத் திரும்பக்கூடிய வசதிகள் இருக்கின்றன. பிடித்த மீன்களைப் பழுதடையாமல் பாதுகாத்துவைத்திருக்கக் கூடிய குளிர்சாதன வசதிகளும் கப்பல்களில் இருக்கின்றன. வடகடலில் பிடிக்கப்படுகின்ற மீனில் 20% பிரித்தானியா பிடிக்கின்றது.

## கைத்தொழில் மையங்கள்

பிரித்தானிய தீவுகளின் 'கைத்தொழில் மையங்கள் என எட்டுப்பிரதேசங்களைக் குறிப்பிடலாம். இந்த எட்டுப்பிரதேசங்களும் கைத்தொழிலாக்கங்களில் மிகவும் விருத்தியுற்றிருக்கின்றன. (படம் 10-ஐ நோக்குக)

I. **லண்டனும் தென்கீழ்ப் பகுதியும்:** தேம்ஸ் நதியின் பொங்குமுகத்தில் நன்கு விருத்தியுற்றுள்ள கைத்தொழில் மையமாக லண்டனும் தென்கீழ்ப் பகுதியும் அமைந்துள்ளன. இந்த மையத்தில் பல்வேறு பரும்படி உற்பத்தித் தொழில்களுள்ளன இம் மையம் நிலக்கரி வயல்களின் மேலாவது அண்மையிலாவது அமையவில்லை எனினும் லண்டன் என்ற பெருந்துறைமுகம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனாலேயே இது கைத்தொழில் மையமாக விருத்தியுற்றுள்ளது. தேவையான மூலப்பொருட்கள் இலகுவில் இங்கு கப்பல்கள் மூலம் இறக்குமதி செய்யக்கூடியதாகவுள்ளது. இம்மையத்தில் விமானம் கட்டுதல் நடைபெறுகின்றது. சீனி, பெற்றோலியம், தாவர எண்ணெய் ஆகியன சுத்தப்படுத்தப்படுகின்றன. வெட்டு மரங்கள், அறுக்கப்படுகின்றன. தோல் பதனிடுதல், மாவரைத்தல், புடவைகள், கடுதாசி, உரம், சவர்க்காரம், றப்பர் பொருட்கள், கயிறு, வீட்டுத்தளபாடங்கள், இரும்புப் பாதைப் பொருட்கள் முதலான பல்வேறு கைத்தொழில்களும் இம்மையத்தில் நடைபெற்றுவருகின்றன.

2. மிட்லாண்ட் பிரதேசம்: பெனின் மலைப் பிரதேசத்தின் தென் பகுதியில் பேமிங்காமை மையமாகக்கொண்டு மிட்லாண்ட் கைத்தொழில் மையம் அமைந்துள்ளது. இது நிலக்கரி வயல்களின் மேல் அமைந்துள்ளமைதான் மிட்லாண்ட் கைத்தொழிற் பிரதேசமாக உருவாகக் காரணமாகும். இரும்புருக்குத் தொழில்கள். எந்திரவியல் தொழில்கள், இரும்புருக்கோடு சம்பந்தப்பட்ட அடிப்படைக் கைத்தொழில்கள் (மோட்டர்க்கார் முதலியன) நிலக்கரிச் சுரங்கத்தொழில், நெசவுத்தொழில், பாதணிகள், தயாரிக்கும் தொழில் என்பன இம்மையத்தில் நடைபெற்றுவருகின்றன.

3. யோக்சயர் - நொத்றிங்காம் - டேபி பிரதேசம்: இக்கைத்தொழில் மையம் பரந்ததோர் நிலக்கரிப் படுகையில் வசதியாக அமைந்துள்ளது. இரும்புருக்குத் தொழில், எந்திரவியற்றொழில்கள், பருத்தி, கம்பளி நெசவு, பட்டு, றையோன் நெசவு, இரசாயனப்பொருட்கள், தோல் தொழில், மோட்டார் வாகனங்கள், விமானங்கள் கட்டுந்தொழில் என்பன இப்பிரதேசத்தில் நடைபெற்றுவருகின்றன.

யோக்சயர் - நொற்றிங்காம் - டேபி பிரதேசத்தின் கைத்தொழில் விருத்திக்கு அதன் அமைவிடமே முக்கியகாரணமாகும். இம்மையத்தினுள் அமையும் கைத்தொழிலாக்கங்கள் யாவும் பரந்த நிலக்கரிப் பிரதேசத்தில் அமைவுற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பெரியபிரித்தானியாவிலேயே மொத்த உற்பத்தியில் 41 சதவீதமான நிலக்கரி இப்பிரதேசத்திலேயே உற்பத்தியாகின்றது. வடக்கே பிருட்போட்டியிலிருந்து தெற்கே நொற்றிபாங்காம்-டேபி வரை நிலக்கரிப் படுக்கை பரந்து காணப்படுகின்றது. இத்தொழில் மையத்திற்கு அருகாமையில் இரும்புத் தாதும் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. கிழக்குப் பகுதியில் ஸ்கன்தோப், கிரான்தம் பகுதிகளில் இரும்புத்தாதுள்ளது. இக்கைத்தொழில் மையத்தில் போக்குவரத்துப் பாதைகள் குவிமையத் தன்மையில் அமைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளன. இரும்புப் பாதைகள், மூலப்பொருள் நிலையங்களையும் துறைமுகங்களையும் நன்கு இணைத்து அமைந்துள்ளன. இவை யாவும் யோக்சயர் பிரதேசத்தைச் சிறந்ததோர் கைத்தொழில் மையமாக்கியுள்ளன.

இக்கைத்தொழில் மையத்தின் பிரதான தொழில்களில் இரும் புருக்குத் தொழிலும், கம்பளி நெசவுத் தொழிலும் முக்கிய மானவை. செபீல்ட் எனும் நகரை மையமாகக் கொண்டு ஒருட்டகாம், பார்ணஸ்லே, டொன்காஸ்ரர், செஸ்ரபில்ட் எனும் நகர்களை உள்ளடக்கிய பிரதேசம் இரும்புருக்குத் தொழிலில் முதன்மையான பகுதியாகவுள்ளது. இதனுடன் கெயிக்லி, பிருட் போர்ட், லீட்ஸ், டொன்காஸ்ரர், மான் ஸ்டீல்ட், நொற்றிங் காம், டேபி, இல்க்ஸ்ரன் முதலான நகர மையங்களிலும் இரும் புருக்குத் தொழில் விருத்தியுற்றுள்ளது. யோக்சயர் மையத்தில் கம்பளி நெசவுத் தொழில் மிக முக்கியமான தொழிலாகும்.

4. லங்காசயர் கைத்தொழில் மையம்: லங்காசயர் கைத் தொழில் மையம், பெரிய பிரித்தானியாவில் வட மேற்கே அமைந் துள்ளது. எந்திரவியற்றொழில்கள், பருத்தி நெசவுத் தொழில், இரசாயனத் தொழில், கண்ணாடித் தொழில், ஆடை தயாரித்தல், இலெக்ரோனிக் தொழில் என்பன முக்கிய பருப்படியாக்கத் தொழில்களாக விளங்குகின்றன.

நிலக்கரிப் படுக்கையில் லங்காசயர் மையம் அமைந்துள்ள போதிலும் இங்கு இரும்புருக்குத் தொழில் யோக்சயர்-நொற்றிங் காம் மையம் போன்று குறிப்பிடத்தக்கதன்று. மான்செஸ்ரர், ஒல்ட்காம், பேறி, பொல்ரொன, ஒருக்டேல், பிளாக்போர்ன் முதலிய நகர மையங்களை அடுத்தே இரும்புருக்குத் தொழில் நடைபெற்று வருகின்றது.

பெரிய பிரித்தானியாவிலுள்ள கைத்தொழிற் பிரதேசங்களில் நெசவுத் தொழிலிற்குப் புகழ்பெற்ற பிரதேசம் லங்காசயர் ஆகும். லங்காசயர் நெசவுக் கைத்தொழிலைப் பொறுத்த வரை யில் உலகப் புகழ்பெற அவ்விடத்தில் இக்கைத்தொழில் நன்கு விருத்தியடையச் சாதகமாக இருந்த ஏதுக்களே காரணங் களாகும்.

லங்காசயர் ஆரம்பத்தில் கம்பளி நெசவுக் கைத்தொழிலி லேயே ஈடுபட்டிருந்தது. பின்பே பருத்தி நெசவுக் கைத் தொழில் முக்கியத்துவம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலப்பொருட்களைக் கொண்டு வருவதற்கும் உற்பத்திப் பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கும் ஏற்ற கால்வாய்கள், இரும்புப் பாதைகள், வீதிகள், துறைமுகங்கள் என்பன இப்பிரதேசத்தில் சிறந்தமுறையில் அமைந்துள்ளன. யப்பான், சீனு, இந்தியா போன்ற உலகநாடுகள் பருத்தி நெசவுத் தொழிலில் இன்று ஈடுபட்டு மலிவான துணிகளை உற்பத்தி செய்து வருவதால், லங்காசயர் இன்று, விலை மதிப்புள்ள மிகத் தரமான துணிகளை நெசவு செய்வதில் ஈடுபட்டு வருகின்றது.

5. வடகீழ் இங்கிலாந்துக் கைத்தொழில் மையம் : நியூகாசில் எனும் நகரத்தை மையமாகக் கொண்டு வடகீழ் இங்கிலாந்துக் கைத்தொழில் மையம் உருவாகியுள்ளது. நிலக்கரி அகழ்தல் தொழில், இரும்புருக்குத் தொழில், எந்திரவியற்றொழில், கப்பல் கட்டுந் தொழில், இரசாயனத் தொழில், ஆடைவகை தயாரிக்கும் தொழில் என்பன இம்மையத்தில் நன்கு விருத்தியுற்றுள்ளன. இம்மையத்தில் நொதம்பர்லாண்ட், டேகாம் பிரதேசங்கள் அடங்கியுள்ளன.

இக்கைத்தொழிற் பிரதேசம், பரந்ததொரு நிலக்கரிப் படுக்கைமீது அமைந்துள்ளது. இது வடக்கே அல்ண்விக் நகரத்திலிருந்து தெற்கே வெஸ்ற் காற்றில்பூல், பிசொபஒக்லாண்ட் நகர்கள் வரை பரந்து காணப்படுகின்றது. கிளீவ்லாண்ட், பகுதியில் இரும்புத்தாது வயல்களும் காணப்படுகின்றன. இவை காரணமாக இப்பிரதேசத்தில் இரும்புருக்குத் தொழில் விருத்தியுற்றுள்ளது. இரும்புருக்குத் தொழில் நன்கு நடைபெறும் பிரதேசமாக இம்மையத்தில், நியூகாசில், கேற்ஸ்கெட், சவுத்சீல்ட், ரைன்மவுத், கண்டலாண்ட் முதலான நகர்ப்புறங்களை இணைத்த பிரதேசம் அமைந்துள்ளது. அத்துடன் பிசொப்ஒக்லாண்ட், வெஸ்ற் காற்றில்பூல், டாலிங்ரொன், மிடில்ஸ்பரோ எனும் நகர்களை அடுத்தும் இரும்புருக்குத் தொழில் நடைபெற்று வருகின்றது.

இக் கைத்தொழில் மையத்தில் பல்வகையான பரும்படியாக்கத் தொழில்கள் நடைபெற்று வருகின்றன. கப்பல் கட்டுந் தொழில் சவுத்சீல்ட், கண்டலாண்ட், வெஸ்ற் காற்றில்பூல் எனும் துறைமுகங்களில் நடைபெற்று வருகின்றது.

6. வேல்ஸ் பிரதேசம் : வேல்ஸ் பிரதேசத்தில் தென்வேல்ஸ் பகுதியே கைத்தொழில் மையமாகும். இங்கு இரும்புருக்குத் தொழில், எந்திரவியற்றொழில், கப்பல் கட்டுந்தொழில், பெற்றோலியம் சுத்திகரிக்கும் தொழில் என்பன நடைபெற்று வருகின்றன. இக்கைத்தொழில் மையப் பிரதேசத்தில் நிலக்கரிப் படிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் இரும்புத் தாதுப்படிவுகளும் காணப்படுகின்றன. அதனுல் தான் இப்பிரதேசம் கைத்தொழில் மையமாக உருவாகியது.

7. ஸ்கொட்லாந்துக் கைத்தொழிற் பிரதேசம்: ஸ்கொட்லாந்தின் கைத்தொழிற் பிரதேசம், ஸ்கொட்லாந்தின் தாழ்நிலப் பகுதியில் (மிட்லாண்ட்பள்ளத்தாக்கில்) அமைந்துள்ளது. தெற்கேயுள்ள தென் உயர் நிலத்திற்கும் வடக்கேயுள்ள வட உயர் நிலத்துக்கு மிடையில் காணப்படும் நிலக்கரிச் சுரங்கங்களை ஆதாரமாகக் கொண்டு, ஸ்கொட்லாந்தின் கைத்தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. எந்திரவியற்ருெழில், கப்பல் கட்டுந்தொழில், நிலக்கரி அகழ் தற்ருெழில், இரும்புருக்குத் தொழில், நெசவுத்தொழில்,. மோட்டார் வாகனத் தொழில், எலெக்ரோணிக் தொழில், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழில் என்பன ஸ்கொட்லாந்தின் பிரதான தொழில்களாகும். லானேர்க் பிரதேசம், அயர்சயர் பிரதேசம் என்பன ஸ்கொட்லாந்தின் கைத்தொழில் நடைபெறும் சிறந்த பிரதேசங்களாகும். லானேர்க் பிரதேசத்தில் கமில்ரன் நகரத்தை மையமாகக் கொண்டு கைத்தொழிலாக்கங்கள் நடைபெறுகின்றன

கிளேட் பகுதியில் கிடைக்கும் ஏராளமான நிலக்கரி இரும்புருக் குத் தொழிலிற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இரும்புத்தாது இப் பிரதேசத்தில் இல்லை. அதனுல் இறக்குமதி செய்யப்பட்டு இரும்பு ருக்குத் தொழில் இயங்கி வருகின்றது. கோட்பிறிட்ஜீ, மதர்வெல், விஸ்ஸோ எனும் பகுதிகளில் இரும்புருக்குத் தொழில் இயங்கி வருகின்றது. பய்ஸ்லே நகரத்தை அடுத்த பகுதிகளில் நெசவுத் தொழில் நடைபெறுகின்றது. கிளாஸ்கோ நகரத்தை அடுத்து ஆழ மாக்கப்பட்ட கிளேட் நதி முகத்தில் கப்பல் கட்டுந்தொழில் நடைபெறுகிது. உலகிலேயே சிறந்த கப்பல் கட்டுந் தளங்களில் இதுவும் ஒன்ருகும்: கிளாஸ்கோ சிறந்த துறைமுகமாகவுள்ளது; கிளேட்நதியின் தென் மருங்கில்அமைந்துள்ள கிறீன் ஒருக், கோருெக் நகர்களில் பல்வகைக் கைத்தொழில்களும் விருத்தியுற்றுள்ளன

8. வட அயர்லாந்துக் கைத்தொழிற் பிரதேசம்: வட அயர்லாந் தில் கப்பல் கட்டுந் தொழில், எந்திரவியற்ருெழில், லினன், கம்பளி இறேந்தை நெசவுத்தொழில் என்பன நடைபெற்று வருகின்றன. பெல்பாஸ்ற் பிரதேசத்தில் லினன் நெசவு, கப்பல் கட்டுந் தொழில், எந்திரவியற்ருெழில் என்பன நடைபெறுகின்றன. பெல்பாஸ்ற் சிறந்த துறைமுகமாக இருப்பதால், கைத்தொழில் விருத்திக்கு நன்கு உதவியுள்ளது. லண்டன்டேறித் துறைமுக நகரத்திலும் ஆடை தயாரித்தல் தொழில் முதன்மை பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடித்தொகை 5

பிரித்தானிய தீவுகளின் மொத்தக் குடித்தொகை ஏறத்தாழ 9 கோடியே 23 இலட்சங்களாகும்; இதில் ஏறத்தாழ 5 கோடியே 64 இலட்சம் மக்கள் ஐக்கிய இராச்சியத்திலும் 3 கோடியே 59 இலட்சம் மக்கள் அயர்லாந்திலும் வாழ்ந்து வருகின்றார்கள் 1631ம் ஆண்டில் பிரித்தானிய தீவுகளின் மொத்தக் குடித்தொகை ஏறத்தாழ $4\frac{1}{2}$ கோடியாகும் 19-ம் நூற்றாண்டின் இறுதியில் பெரிய பிரித்தானியாவின் குடித்தொகை ஏறத்தாழ 3 கோடியே 80 இலட்சங்களாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. அரை நூற்றாண்டுக் காலத்தினுள் பிரித்தானிய தீவுகளின் குடித்தொகை ஒன்பதே கால் கோடியைத் தாண்டியமைக்கு இரு காரணங்கள் பொதுவாகக் கூறப்படுகின்றன.

(அ) குறிப்பிடத்தக்க குடிப்பெருக்கம்.
(ஆ) உலகின் ஏனைய நாடுகளிலிருந்து நிகழ்ந்த குடிப்பெயர்வு

குடிப்பெருக்கம் : குடித்தொகையில் உலகெங்கனும் இறப்பு விகிதம் குறைந்து பிறப்பு விகிதம் அதிகரித்து வருவது கண்கூடு. விஞ்ஞான, மருத்துவத் துறைகளில் விரைவாக முன்னேறியுள்ள பிரித்தானிய தீவுகளில் இறப்பு விகிதம் கட்டுப்படுத்தப்பட்டு பிறப்பு விகிதம் அதிகரித்தமை வியப்புக்குரியதன்று. நவீன மருத்துவ வசதிகள் பிரித்தானிய மக்களின் சராசரி ஆயுளை நீடித்திருக்கின்றன. அதேவேளை பிறப்பினையும் இலகுவாக்கியுள்ளன. கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய தீவுகளில் இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 12 ஆக இருந்தது. அதேவேளை பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 19 ஆக இருந்தது. 1964-ம் ஆண்டில் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 18.8 ஆகவும் இறப்பு விகிதம் 12 ஆகவும் இருந்தது. 1975-ஆம் ஆண்டு இந்த பிறப்பு விகிதமும் இறப்பு விகிதமும் பெரும் மாற்றத்தினைக் காட்டின. இறப்பு விகிதம் அதே 12 விகிதமாக இருக்க பிறப்பு விகிதம் 13.4 ஆக வீழ்ச்சியுற்றது எனினும், அண்மை ஆண்டுகளில் பிறப்பு விகிதம் அதிகரித்து வருகின்றது

குடிப்பெயர்வு; 19-ம் நூற்றாண்டிலும் 1939ஆம் ஆண்டு வரையும் பிரித்தானிய தீவுகளிலிருந்து ஏராளமான மக்கள் ஆங்கிலம் பேசும் நாடுகளுக்கு ஏராளமாகக் குடிபெயர்ந்து சென்று குடியேறினார்கள். அமெரிக்க நாடுகள் அவுஸ்திரேலியா போன்ற ஆங்கிலம் பேசும் நாடுகளில் பிரித்தானிய மக்கள் விரும்பிக்குடியேறினர். ஆனால் 1931 — 51 ஆண்டுகளில் ஏறத்தாழ 5 இலட்சம் மக்கள் வரை உலகின் ஏனைய நாடுகளிலிருந்து வந்து பிரித்தானியாவில் குடியேறியவர்களாவர். அண்மை ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பிரித்தானிய தீவுகளிலிருந்து வெளிநாடுகளுக்கு சிறு தொகை மக்கள் (197 இல் 42,000 மக்கள்) குடிபெயர்கின்ற போதிலும் பேற்கிநதிய தீவுகள், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற பொது நலவரசு நாடுகளிலிருநது வருடாவருடம் ஏராளமான மக்கள் பிரித்தானிய தீவுகளில் குடியேறிவருகின்றனர். 1960 — 62 ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ 3,83,000 மக்கள் பிரித்தானிய தீவுகளில் குடியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


## சமனற்ற குடிப்பரம்பல்

பிரித்தானிய தீவுகளின் 1,21,000 சதுரமைல் நிலப்பரப்பில் 9 கோடியே 23 இலட்சம் மக்கள் வாழ்ந்துவருகின்றனர். இதன்படி ஒருசதுர மைலுக்குரிய குடிப்பரம்பல் 762 பேராகும் ஆனால் பிரித்தானியாவின் குடிப்பரம்பல் சமனற்றதாக விளங்கி வருகின்றது. மக்களது அத்தியாவசிய தேவைகளை இலகுவில் பெறக்கூடியபகுதிகளில் மக்கள் அடர்த்தியாயும், ஏனையபகுதிகளில் ஐதாகவும் வாழ்ந்து வருகின்றனர். ஐக்கிய இராச்சியத்தில் ஒரு சதுரமைலுக்குரிய சராசரி குடியடர்த்தி 598 பேராகும். அதிலும் இங்கிலாந்து பிரதேசத்தில் ஒரு சதுர மைலுக்குரிய அடர்த்தி 923 பேராகும்

பிரித்தானிய தீவுகளின் குடிப்பரம்பலை பொதுவாக நோக்கில் குடிம்பரம்பல் குறைவான பகுதிகள் மேட்டு நிலங்களாகவும் மலைப்பிரதேசங்களாகவும் அமைந்துவிளங்குவதைக் காணலாம். ஸ்கொட்லாந்தின் வளமான கிழக்குக்கரை தவிர்ந்த ஏனையபகுதிகள் ஸ்கொட்லாந்தின் தெற்மேட்டு நிலம் என்பன ஒரு சதுர மைலுக்கு 100 பேருக்குக் குறைவான குடிப்பரம்பலைக் கொண்டு விளங்குகின்றன. ஆனால் ஸ்கொட்லாந்தின் மிட்லாண்ட் பள்ளத்தாக்கிலும், கிழக்குக் கரையிலும் ஒருசதுர மைலுக்குரிய குடிப்பரம்பல் 250 — 500 வரை காணப்படுகின்றது. ஸ்கொட்லாந்தின் வளமற்ற மலைப்பகுதிகள் குறைவாயும் கைத்தொழிற் பகுதிகள் அதிகமாயும் குடிப்பரம்பலைக் கொண்டுள்ளன.

இங்கிலாந்துப் பிரதேசத்தில் ஒரு சதுரமைலுக்குரிய அடர்த்தி 925 பேராகும். பெனைன் மலைப்பகுதியில் மட்டும்தான் ஒரு சதுர மைலுக்குரிய குடிப்பரம்பல் 100 பேருக்கும் குறைவாயுள்ளது. ஏனைய பகுதிகளில் சதுரமைலுக்குரிய குடிப்பரம்பல் மிக அதிகமாகும். பொதுவாக இங்கிலாந்துப் பிரதேசத்தின் வீளை நில பாகங்களில் குடிப்பரம்பல் 250 — 500 வரையில் காணப்படுகின்றது. ஆனால் லண்டன், லங்காசயர், யோக்சயர், நிகாசில், மிட்லாண்ட் போன்ற கைத்தொழில் மையங்களில் சதுரமைலுக்குரிய குடியடர்த்தி 1000 பேருக்கு மேலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: 11: பிரித்தானிய தீவுகளின் குடிப்பரம்பல்

வேல்ஸ் பிரதேசத்தின் கேம்பிரியன் மலைப்பிரதேசத்தில் குடிப்பரம்பல் மிகக்குறைவாகும். தென்வேல்ஸ் பகுதியில் ஒரு சதுர மைலுக்கு 500 பேருக்கு மேல் வாழுகின்றனர். மேற்குக் கரையோரப் பகுதியில் ஒருசதுர மைலுக்கு 250 — 500 பேர் வரை வாழுகின்றனர்.

அயர்லாந்துத் தீவில் கரையோர மலைப்பகுதிகளில் குடிப் பரம்பல் மிகக்குறைவு. கரையோரப் பாகங்களிலும் மத்திய பாகத்தில் சில சில பகுதிகளிலும் ஒரு சதுரமைலுக்கு 250 —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

500 பேர்வரை வாழ்கின்றனர். ஏனைய பகுதிகளில் 125 — 250 பேர்வரை பரம்பியுள்ளனர்.

## ஒரிடப்படுத்தப் பட்டிருக்கும் குடியடர்த்தி

பிரித்தானிய தீவுகளின் பிரதான தொழில் முயற்சியாகப் பயிர்ச் செய்கை இருந்த 150 ஆண்டுகளுக்கு முன்னர், விளை நிலங்கள் காணப்பட்ட இங்கிலாந்து, வேல்ஸ், தென்கிழக்கு மிட்லாண்ட் ஆகிய பிரதேசங்களில் அதிக குடியடர்த்தி காணப்பட்டது. ஆனால் கைத்தொழிற் புரட்சியின் பின்னர் கைத்தொழில் மையங்களில் மக்கள் செறிவாக வாழ்ந்து வரத்தொடங்கியுள்ளனர். மக்களின் ஒரிடப்படுத்தப்பட்ட அடர்த்தி கைத்தொழில் மையங்களிலும் நகர மையங்களிலும் காணப்படுகின்றது. நகரங்களில் கைத்தொழிலாக்கமறினால் ஏற்பட்ட பட்டின வொருக்கங்களில் (Conurbation) குடியடர்த்தி செறிவாக ஒரிடப்படுத்தப்பட்டுள்ளன.

(அ) லண்டன் நகரை மையமாகக் கொண்ட பட்டின வொருக்கத்தில் 75 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். (ஆ) பேமிங்காமை மையமாகக்கொண்ட பட்டின வொருக்கத்தில் 23 லட்சம் மக்களும். (இ) லிவப்பூலை மையமாகக் கொண்ட மோர்சேசயிட் பட்டினவொருக்கத்தில் 14 இலட்சம் மக்களும் (ஈ) மான்செஸ்ரரை மையமாகக்கொண்ட தென்கிழக்கு லங்காசயர் பட்டினவொருக்கத்தில் 25 லட்சம் மக்களும் (உ) லீட்ஸ் நகரை மையமாக்கொண்ட மேற்கு யோக்சயர் பட்டினவொருக்கத்தில் 13 இலட்சம் மக்களும் (ஊ) நியுகாசில் நகரத்தை மையமாகக் கொண்ட பட்டினவொருக்கத்தில் 8 லட்சம் மக்களும் (எ) கிளாஸ்கோ நகரை மையமாகக் கொண்ட மத்திய கிளைட்சயிட் பட்டினவொருக்கத்தில் 14 இலட்சம் மக்களும் செறிவாக வாழ்ந்து வருகின்றனர்.

ஐக்கிய இராச்சியத்தின் பெரிய நகர்களின் குடித்தொகை வருமாறு

| | | |
|---|---|---|
| பெரிய லண்டன் | — | 67,65,100 |
| பேமிங் காம் | — | 10,17,300 |
| கிளாஸ் கோ | — | 761,000 |
| லீட்ஸ் | — | 716,000 |
| செவீல்ட் | — | 545,800 |
| லிவப்பூல் | — | 510,700 |
| பிராட்போர்ட் | — | 464,700 |
| மஞ்செஸ்ரர் | — | 458,600 |
| எடின்பேக் | — | 444,700 |
| பிறிஸ்ரல் | — | 399,600 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய தீவுகளிலுள்ள நகரங்கள் அடர்த்தியாக மக்களைக் கொண்டிருக்கின்றன. லண்டன், பேமிங்காம், லிவப்பூல், மஞ்செஸ்டர், லீட்ஸ், கிளாஸ்கோ, டப்ளின் முதலான ஒவ்வொரு நகரத்திலும் 5 இலட்சம் மக்களுக்கு மேல் வாழ்ந்து வருகின்றனர். பிறைற்றேன், மோட்ஸ்மவுத் சவுதாம்ரன், பிளைமவுத் பிறிஸ்ரல், கார்டிவ், நியூபோட், சுவான்சி, ஒக்ஸ்போட், ஹல், ரோட்போட், செபீல்ட். எடின்பேக், அபேடின், பெல்பாஸ்ற், பிகாக் முதலிய ஒவ்வொரு நகரத்திலும் ஒரு இலட்சத்திலிருந்து 5 இலட்சம் மக்கள்வரை வாழ்ந்து வருகின்றனர்.

## குடிப்போக்கு

(அ) ஐக்கிய இராச்சியத்தில் 106 பெண்களுக்கு 100 ஆண்களே உள்ளனர். வயது அமைப்பில் இளமையான குடிசனம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தில் வாழ்கின்ற ஆண்களினது சராசரி 71 ஆண்டுகளாகவும், பெண்களினது சராசரி வாழ்வெல்லை 75 ஆண்டுகளாகவும், அமைந்துள்ளன. ஆயிரம் பிறப்புகளில் 10 குழந்தைகள் இறக்கின்றன. குழந்தைப் பேற்றின்போது இறக்கின்ற தாய்மாரின் எண்ணிக்கை ஆயிரத்துக்கு 60.2 ஆகும்.

(இ) பிரித்தானியாவின் குடித்தொகையில் பெரும்பகுதி நகரங்களையும் நகர அயல் பகுதிகளையும் சார்ந்ததாகக் காணப்படுகின்றது ஐக்கிய இராச்சியத்தின் குடித்தொகையில் அரைப்பங்கினர் லங்காசயரையும் மேற்கு யோக்சயரையும் ஒரு புறத்திலும், மிட்லாண்ட் கைத்தொழில் மையத்தினை நடுவிலும் லண்டனை மறு புறத்திலும் கொண்ட ஒரு நகர வலயத்தில் வாழ்ந்து வருகின்றனர் 80 சதவீத மக்கள் நகர மக்களாவர்.

(ஈ) பிரித்தானிய தீவுகளின் குடிப்போக்கு, பிரச்னைக்குரியதாகவில்லை: உணவுபிரச்சினை, தொழிற் பிரச்சினை, வதிவிடப் பிரச்சினை என்பன கீழைத்தேச நாடுகளைப் போன்ற பிரச்சனைக்குரியதாகவில்லை பொருளாதார விருத்திக்கும் குடிப்பெருக்கத்திற்கும் இடையில் நிலவி வருகின்ற சமநிலை; அண்மைக் காலம்வரை பிரச்சினைகளை உருவாக்கவில்லை. குடிப்பெருக்கம் மிகவும் குறைவாகவுள்ளது. 1975-இல் ஆயிரத்துக்கு இறந்தோர் 12 ஆகவும் பிறந்தோர் 12.4 ஆகவும் காணப்பட்டனர் இந்நாடுகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வாகக் காணப்படுவதால், குடிப்பெருக்கம் இயல்பாகவே குறைவாக இருக்கின்றது.

(உ) பெரிய பிரித்தானியாவில் தொழில் தேடியும், வசிக்கவும் வருகின்ற அந்நியநாட்டு மக்களின் குடிப்பெயர்வுதான், அண்மைக் காலப் பிரச்சினைகளாக விளங்கி வருகின்றன. வருடாவருடம் ஏறத்தாழ 40,000 அந்நியநாட்டு மக்கள் பிரித்தானியாவில் குடியேறி வருகின்றனர். இவர்களின் குடியேற்றம் பிரித்தானியாவில் தொழில் பிரச்சினைகளையும் வதிவிடப் பிரச்சினைகளையும் ஏற்படுத்துவதால் தேசிய மக்களில் ஒரு பகுதியினர் அந்நியநாட்டு மக்களின் வருகையை விரும்புவதாயில்லை: அதனால்தான் அண்மையாண்டுகளில் 'உண்ணாட்டுக் குடியேற்றச் சட்டங்கள்' உருவாக்கப்பட்டு அந்நிய குடிப்பெயர்வு கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுகங்கள் நகரங்கள் 6

## துறைமுகங்கள்

பிரித்தானிய தீவுகளின் கடற்கரை அமைப்பும், நிலையமும் நல்ல பல துறைமுகங்களை உருவாக்க உதவியுள்ளன; வர்த்தக வளர்ச்சி, கைத்தொழில் வளர்ச்சி என்பன துறைமுகங்களின் விருத்திக்குத் தூண்டுதலாக அமைந்துள்ளன. லண்டன், லிவப் பூல், ஹல் என்பன பிரித்தானிய தீவுகளின் பிரதானமான துறை முகங்களாகும். இவற்றைவிட தென் கரையோரத்தில் பிளைமவுத், சவுதாம்பரன், நியூகேவன், போக்ஸ்ரோன், டோவர் ஆகிய துறை முகங்கள் அமைந்துள்ளன. கிழக்குக் கரையில் ஹாவிச், கிறிம்ஸ்பி, மிடில்ஸ்பிறூக், சுண்டலாண்ட், கிறேன்ஜ்மவுத், டண்டி, அபேடின் முதலிய துறைமுகங்கள் காணப்படுகின்றன. மேற்குக் கரை யோரத்தில் நியூபோட், கார்டிவ், சுவசன்சீ, பிறிஸ்ரல், ஹொலி ஹெட், கிளாஸ்கோ, கிறீன்நொக் என்னும் துறைமுகங்கள் காணப் படுகின்றன. அயர்லாந்தில் லிம்றிக், ஹல்வே, டப்ளின், பெல் பாஸ்ற் என்பன மிக முக்கியமான துறைமுகங்களாக விளங்கு கின்றன.

## லண்டன்

ஐக்கிய இராச்சியத்தின் தலைநகராக விளங்கும் லண்டன் உல கின் மிகப்பெரியதொரு நகரமாகவும், தக்கதோர் துறைமுகமாக வும் விளங்குகிறது. லண்டன் கடற்கரையோரமாக அமையாது உள்ளூட்டில் அமைந்திருப்பது, இதன் வளர்ச்சிக்கு தூண்டு தலாக அமைந்துள்ளது. தேம்ஸ் நதியில் இது உருவாகியதால் தான் இதன் உண்ணாட்டு நிலையம் அமைந்தது. தேம்ஸ் நதியில் கப்பலோட்டத்திற்குகந்த பகுதியின் இறுதியில் லண்டன் அமைந் துள்ளதோடு, இதன் அமைப்பு கப்பல்கள் பாதுகாப்பாகத் தங்க வும், ஏற்றியிறக்கவும் வாய்ப்பாகவுள்ளது. ஐரோப்பிய நாடு களிலிருந்தும், ஆசிய நாடுகளிலிருந்தும் வரும் கப்பல்களுக்குப் பிரித்தானியாவில் அருகிலுள்ள துறைமுகமாக லண்டன் விளங்கு கிறது.

லண்டனில் உண்ணாட்டு வீதிகளும், இரும்புப் பாதைகளும் வந்து குவிமையமாக இணைகின்றன. நிலப்பாதைகளும் கடற் பாதைகளும் ஒருங்கே இணைகின்ற தன்மையை லண்டனில் காண லாம். இங்கு இரசாயனக் கைத்தொழில்கள், பாரமில்லாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில்கள் ஆடை உற்பத்தித் தொழில்கள் என்பன நன்கு விருத்தியுற்றுள்ளன. ஐக்கிய இராச்சியத்தின் மொத்த இறக்குமதியில் ½ பங்கும் மொத்த ஏற்றுமதியில் ¼ பங்கும் லண்டனூடாகவே நடைபெறுகின்றது. மேலும் கம்பளி, தேயிலை, றப்பர் முதலான பொருட்களின் உலக விற்பனைச் சந்தையாகவும் லண்டன் விளங்குகின்றது.

## லிவப்பூல்

மேற்கே அமைந்துள்ள லிவப்பூல் நகரம், பிரதானமானதோர் துறைமுகமாகும். லங்காசயர் கைத்தொழிற் பிரதேசத்தின் முக்கியமான துறைமுகமாக இது விளங்கி வருகின்றது. ஆரம்பத்தில் லிவப்பூல், மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தும் வட அமெரிக்காவிலிருந்தும் சீனி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தது மேர்சி நுழைகழியின் வடகரையிலமைந்துள்ள லிவப்பூல் சிறந்ததொரு துறைமுகப் பட்டினமாக வளர்ச்சிபெற்றது. லங்காஷயர் கைத்தொழிற் பிரதேசத்தின் பருத்தி நெசவுத் தொழிலின் விருத்தியின் பின்னர் ஆகும். ஐரிஸ் கடலை நோக்கி லிவப்பூல் அமைந்துள்ளது. லிவப்பூல் துறைமுகம் பெரிய கப்பல்கள் தங்கி நிற்கக் கூடிய விதமாக நவீன முறையில் ஆழமாக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. லிவப்பூல் துறைமுகத்தில், பருத்தி, புகையிலை, பெற்றோலியம் என்பன ஐக்கிய அமெரிக்காவிலிருந்தும்' சீனி, பழவகை என்பன மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தும், தாவர நெய், கொக்கோ, கொப்பறா என்பன மேற்கு ஆபிரிக்காவிலிருந்தும், கோதுமை கனடாவிலிருந்தும், இறைச்சி ஆசெந்திஞவிலிருந்தும், கம்பளி அவுஸ்திரேலியாவிலிருந்தும் இறக்குமதியாகின்றன. இங்கிருந்து மோட்டார் வாகனங்கள், துணிவகைகள், யந்திரங்கள், இரசாயனப் பொருட்கள் என்பன ஏற்றுமதியாகின்றன.

பெரிய பிரித்தானியாவின் தென்கரையோரத்தில் பிளைமவுத், சவுதாம்பரன், நியூகெவன், போக்ஸ்ரோன், டோவர் எனும் துறைமுகங்கள் அமைந்துள்ளன.

பிளைமவுத் துறைமுகம் டேவொன் மாகாணத்தில் ரமார் நதியின் பொங்குமுகத்தில் அமைந்துள்ளது. கப்பல் திருத்தும் வசதி, கட்டும் வசதி என்பன பிளைமவுத் 'துறைமுகத்திலுள்ளன பிளைமவுத் துறைமுகத்திலுள்ளன பிளைமவுத் துறைமுகத்திலிருந்து தென் பிரதேச இரும்புப் பாதைகள் வடக்கேயும் மேற்கேயும் இணைத்து அமைக்கப்பட்டுள்ளன. பிரித்தானிய தீவுகளின் மிகப் பழமை வாய்ந்த பிரயாணிகள் துறைமுகம் சமவுதாம்பரன் ஆகும். இது வைற்றீவிற்கு வடக்கே இற்சன் நதியின் பொங்குமுகத்தில் ஒரு நீள் குடாவில் அமைந்துள்ளது. அடிக்கடி கடற்பெருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுவதால் இது நல்லதொரு துறைமுகமாக விருத்தியுற்றுள்ளது சஸ்செக் மாகாணத்தின் துறைமுகமாக நியூகெவன் அமைந்துள்ளது. இது ஒளசி நதியின் பொங்குமுகத்தில் உள்ளது. கெண்ற் மகாணத்தின் துறைமுகங்களாக போக்ஸ்ரோன் டோவர் என்பன அமைந்துள்ளன.

பெரிய பிரித்தானியாவின் கிழக்குக்கரையில் எசெக் மாகாணத்தின் துறைமுகம் ஹாவிச் ஆகும். இது ஸ்ரவர் நதிமுகத்தில் அமைந்துள்ளது. ஹம்பர் நீள்குடாவில், கிறிம்ஸ்சி துறைமுகம் உள்ளது; லிங்கொன் மாகாணத்தின் துறைமுகம் இதுவாகும். மரங்கள் கம்பளி, இரும்புத்தாது. கோதுமை என்பன இத்துறைமுகத்தில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன. மீன், நிலக்கரி, நெசவு, இரும்புருக்கு என்பன ஏற்றுமதியாகின்றன. ரீஸ் நதிமுகத்தில் அமைந்துள்ள மிடில்ஸ்பிரேக் துறைமுகம் யோக்சயர் மாகாணத்திற்குரியது; இத்துறைமுகத்தில் கப்பல் கட்டுதல் முக்கியமானது. இரும்புத்தாது மரம் என்பன நார்விக்கிலிருந்து இறக்குமதியாகின்றன. கப்பல்கள், உருக்கு என்பன ஏற்றுமதியாகின்றன வெயர் நதியின் பொங்குமுகத்தில், சுண்டலாண்ட் துறைமுகம் அமைந்துள்ளது. இத்துறைமுகம் டேகாம் மாகாணத்திற்குரியதாகும். டீ நதியின் பொங்குமுகத்தில் அமைந்துள்ள அபேடீன் துறைமுகம், ஸ்கொட்லாந்தின் முக்கிய துறைமுகமாகும்.

பெரிய பிரித்தானியாவின் மேற்குக் கரைப்பகுதியில் பிறிஸ்ரல் கால்வாய்க் குடாவில் காாடிவ், நியூபோட்பி, பிறிஸ்டல் ஆகிய துறைமுகங்கள் அமைந்துள்ளன. அமெரிக்காக் கண்டத்தின் புகையிலை வர்த்தகமும் அயர்லாந்துடனான வர்த்தகமும் பிறிஸ்ரல் துறைமுகத்தினூடாகவே நடைபெற்று வருகின்றன. இது அவொன் நதியில் அமைந்துள்ளது. ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ, மேற்குக் கரையோரத் துறைமுகங்களில் முக்கியமானதொன்றாகும்.

## பெல்பாஸ்ற்

அயர்லாந்தின் வடகீழ்ப் பகுதியில் அமைந்துள்ள பெல்பாஸ்ற் அயர்லாந்தின் தலைநகரமாகவும், துறைமுகமாகவும் விளங்குகின்றது. இந்நகர் பெல்பாஸ்ற் குடாவினுள் அமைந்திருப்பது, இதற்குத் துறைமுக வாய்ப்புக்களை அளித்துள்ளது. இந்நகர் லாகொன் நதிமுகத்தில் உருவாகியுள்ளது. கிளாஸ்கோ, லிவப்பூல் என்பனவற்றுடன் கடற்றொடர்பு கொள்ளத்தக்க நிலையத்தில் பொல்பாஸ்ற் உள்ளது. பிரித்தானிய தீவுகளிலேயே கப்பல் கட்டுந்தொழில் முதலிடம் பெறுவது இத்துறைமுகமே, அயர்லாந்திற்குத் தேவையான நிலக்கரி பெல்பாஸ்ற் ஊடாகவே இறக்குமதியாகின்றது. யந்திரங்கள், லினன் முதலிய தொழில்கள் இந்நகரில் விருத்தியுற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரங்கள்

பெரிய பிரித்தானியாவில் லண்டன், பேமிங்காம், கிளாஸ்கோ, லீட்ஸ், செபீல்ட், லிவப்பூல் என்பன 5 இலட்சத்துக்கு மேல் குடிசனமுடைய பெரு நகரங்களாகும்.

## பேமிங்காம்


பேமிங்காம் பெரிய பிரித்தானியாவில் இரண்டாவது பெருநகர் மாகும்: இந்நகர் 10 இலட்சம் மக்களுக்கு மேல் குடியடர்த்தி கொண்டதாகும். பிளாக்கனறி நிலக்கரி வயல்களில் அமையாது; விலகி கிழக்கே, இந்நகர் அமைந்துள்ளது. இந்நகர் ஒரு வர்த்தக மையமாகும். மோட்டார் வாகனங்கள், மின்சாரப் பொருட்கள், டோர் உபகரணங்கள், றப்பர் பொருட்கள், றையோன் என்பன வற்றை உற்பத்தி செய்யும் நகரமாகவும் விளங்கி வருகின்றது பல் வகை உலோகத் தொழில்களும் பேமிங்காமில் விருத்தியுற்றுள்ளன. உள்ளூரிலேயே இரும்புத்தாது கிடைப்பதும், ஆடென், கனொக் பகுதிகளில் கட்டைக்கரி கிடைப்பதும். டட்லி பகுதியில் சுண்ணக்கல் கிடைப்பதும் உலோகத் தொழிலுக்கு வாய்ப்பாகவுள்ளன எனினும் கடற்கரையிலிருந்து விலகி உண்ணாட்டில் அமைந்திருப்பதுதான் பேமிங்காம் நகரின் விருத்திக்கு ஒரேயொரு தடையாகும். இந்நகர் லண்டன், பிறிஸ்ரல், டேபி முதலான நகர்களுடன் இருப்புப் பாதைகளினால் நன்கு இணைக்கப்பட்டிருக்கின்றது.

## கிளாஸ்கோ

லாஞர்க் மாகாணத்தில், கிளைட் நதியில் கிளாஸ்கோ துறைமுக நகரம் அமைந்துள்ளது. பிரதான நிலக்கரிப் படுக்கையின் மத்தியில் கிளாஸ்கோ அமைவுற்றுள்ளது. இந்நகரத்தில் ஒருங்கே வந்து குவி மையமாக இணைகின்ற வீதிகள் இந்நகரின் முக்கியத்துவத்திற்குச் சான்று; கிளைட் நதி ஆழமாக்கப்பட்டு முக்கிய கப்பற் போக்கு வரவாக மாறியதும், இந்நகரின் விருத்தி அதிகரித்தது. எந்திர வியற்றொழில்களும், பருத்தி நெசவுத் தொழில்களும், சீனி துப்பரவாக்கும் தொழில்களும் கிளாஸ்கோ நகர மையத்தில் விருத்தி யுற்றுள்ளன.

பிரித்தானியதீவுகளின் ஏனைய முக்கிய நகரங்கள் என போட்ஸ் மவுத், சவுதாம்பரன், பிளைமவுத், கார்டிவ், காவுன்ரி, நொற்றிங் காம், ஒக்ஸ்போட் ஸ்ரோக்-ஒன்றென்ற், செபீல்ட், பிருட்போட் ஹல், எடின்பேக், டப்ளின், பெல்பாஸ்ற், கோர்க் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவை போக்குவரத்து வர்த்தக நிர்வாக மைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: 12 பிரித்தானிய தீவுகளின இருப்புப் பாதைகள் துறைமுகங்கள்- நகரங்கள்

நகரங்களாக விளங்குகின்றன இந்நகர்களில் ஒரு இலட்சம் குடிகளுக்கு மேல் வாழ்ந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக வர்த்தகத்தில் இதன் நிலை

ஐக்கிய இராச்சியத்தின் பொருளாதாரத்தில், கைத்தொழில்களும் வர்த்தகமும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களாகும் உலகின் வர்த்தக நாடுகளில் பெரிய பிரித்தானியா இன்று முக்கியத்துவம் வகிப்பதுடன் உலக வர்த்தக ஐந்தாவது நாடாகவும் விளங்கி வருகின்றது. ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு யப்பான் பிரான்ஸ், என்ற வரிசையில் பெரிய பிரித்தானியா ஐந்தாவது இடத்தை வகிக்கின்றது. உலகின் மிகப்பெரிய வர்த்தகப்பிரதேசமான ஐரோப்பிய வர்த்தக சமூகத்திலும் (European Community) பிரித்தானிய இன்று ஓர் அங்கமாகும். 1973-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஐரோப்பிய சமூகம் அமைக்கப்பட்டது. இதில் பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு, இத்தாலி, லக்சம்பேர்க், நெதர்லாந்து, ஐரிஸ்குடியரசு, டென்மார்க், பிரித்தானியா ஆகிய நாடுகள் அடங்குகின்றன. இந்தச் சமூகம் உலக வர்த்தகத்தில் மூன்றிலொரு பங்கினைச் செய்துவருகின்றது.

ஐக்கிய இராச்சியம் உலகின் மூலாதார உற்பத்திப்பொருட்களின் (Primary - Products) ஏற்றுமதி வர்த்தகத்தில் 9 சத வீதத்தை வழங்குகின்றது. உலகின் பரும்படியாக்க உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியிலும் 9சத வீதத்தை வழங்கிவருகின்றது. பெரிய பிரித்தானியாவின் ஏற்றுமதியில் 83 சத வீதமானவை கைத்தொழில் உற்பத்திப் பொருட்களாகும். இதில் அரைப்பங்கு, யந்திரங்கள், மின்சாரக் கருவிகள், வீதி வாகனங்கள், றக்ரர்கள் முதலான எந்திரவியல் உற்பத்திப் பொருட்களாகும். எனவே, பெரிய பிரித்தானியாவின் வர்த்தகம், கைத்தொழில் உற்பத்திப்பொருட்களின் வர்த்தகமாகவே பெரிதுமுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் ஏற்றுமதிப் பொருள் வகைகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| எந்திரங்கள், கருவிகள் | — | 38 % |
| பரும்பிடியாக்கப் பொருட்கள் | — | 30 % |
| எரிபொருட்கள் | — | 22 % |
| உணவு, குடிவகை | — | 7 % |
| மூலப்பொருட்கள் | — | 3 % |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு வர்த்தகமும், மூலதனமிடலும், 16ம் நூற்றுண்டிலிருந்து திட்டமிடப்பட்ட அடிப்படையில் திடமாக வளர்ச்சியுற்று வந்துள்ளது. 18-ம் நூற்றுண்டின் இறுதிக்காலகட்டத்தில் கைத்தொழிலாக்கங்கள் பெரிய பிரித்தானியாவில் விருத்தியுறத் தொடங்கின. 19ம் நூற்றுண்டிலிருந்து உலகவர்த்தகத்தில் பெரிய பிரித்தானியா தன்னைப் பல்வேறு நிலைகளில் ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளது. உலக வர்த்தகத்தில் சிறந்த உற்பத்தி நாடாகவும் வியாபார நாடாகவும் மூலதனமிடும் நாடாகவும் வளர்ச்சியுற்றுள்ளது. அதேவேளை உலகின் உணவுப்பொருட்கள் சிலவற்றிற்கும் பெரியதொரு விற்பனைச் சந்தையாகவும் பெரிய பிரித்தானியா விளங்கி வருகின்றது. இவற்றை உள்ளூர்த் தேவைகளுக்காகப் பெரிய பிரித்தானியா இறக்குமதி செய்து கொள்கின்றது.

பெரிய பிரித்தானியாவின் பொருளாதாரம் இன்று முன்னெப்போதையும்விட வர்த்தகத்தில் தங்கியிருக்கின்றது. பெரிய பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற்றுக் கொண்டதும், இன்று ஐக்கிய அமெரிக்கா, சோவியத் குடியரசு, யப்பான், ஜேர்மனிகள் முதலான கைத்தொழில் நாடுகளின் போட்டியும் அதன் வர்த்தகத்திற்கும் பெரும் பிரச்சினையாகவுள்ளன. எனினும் பெரிய பிரித்தானியா உலகின் மூலாதாரப் பொருட்களில் ஏற்றுமதியில் 9% வழங்கி வருகின்றது. அதன் ஏற்றுமதியில் 83% கைத்தொழில் உற்பத்திப் பொருட்களாகும். இதில் அரைப்பங்கு யந்திரங்கள், மின்சாரக் கருவிகள், வாகனங்கள், றக்ரர்கள் என்பனவாகும். எனவே பெரிய பிரித்தானியாவின் வர்த்தகம் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் வர்த்தகமாகவே இருக்கிறது பெரிய பிரித்தானியாவின் இறக்குமதிப் பொருட்கள் என கைத்தொழில் மூலப்பொருட்கள் (34%). பரும்படி உற்பத்திப் பொருட்கள் (26%) உணவுப் பொருட்கள் (18%). எரிபொருட்கள் (17%) என்பன அடங்குகின்றன. பெரிய பிரித்தானியாவின் சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் சிறப்பு யாதெனில் ஏற்றுமதிப் பொருட்களின் வருமானம் இறக்குமதிப் பொருட்களின் செலவிலும் அதிகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

…ருத்திப்
…வியியல்



ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org